
உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 140 வள்ளுவர் ஆண்டு: 2045
சித்திரை 02 , செவ்வாய் 15.04.2014

32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்
216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444

# அமைதியான முறையில் பிறந்தது புத்தாண்டு



யாழ்ப்பாணம்.ஏப்.15
யாழ்.குடாநாட்டில் சித்திரை வருடப் பிறப்பு அமைதியான முறையில் பிறந்தது. வருடப் பிறப்பை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நேற்று அதிகாலை முதல் இடம்பெற்றன. அவற்றில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். பிரபல இந்து ஆலயங்களில் வருடப்பிறப்பான நேற்றைய தினமே தேர்த் திருவிழாவும் நடைபெற்றதால் ஆலய வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையானோர்கலந்துகொண்டதைக் காணக் கூடியதாக இருந்தது.
நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புதுவருடத்தை முன்னிட்டு நேற்று காலை 6.11 மணிக்கு விஷேட பூசை வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து வசந்தமண்டப பூஜை நடைபெற்று வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெரு மான் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ற-14)

# கோபியின் தாய் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 15
இராணுவத்தினரால் தேடப்பட்ட நபராக அறிவிக்கப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கோபியின் தாயார் உட்படப் பத்துப் பேர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அவர்களுடன் சேர்த்து இதுவரையில் 18 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த மார்ச் மாதம் பளையில், தமிழீழத்தின் காவலர்கள் என்ற துண்டுப் பிரசுரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக வடக்கு மற்றும் தலை நகரிலும் தமிழர்கள் 65 பேர் வரையில் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் கோபி, தேவியன், அப்பன் ஆகிய மூவர் தேடப்படுகின்றனர் என்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அறிவித்திருந்தது.
இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி பதவியா காட்டுப் பகுதியில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்ட, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் என்று இலங்கை அரசால் கூறப்பட்ட கோபி, தேவியன், அப்பன் ஆகியோர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.
இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டுள்ளவர்களை படிப்படியாக விடுவிக்கும் நடவடிக்கைகள் பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரு பெண் உட்பட 8 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர். விடுவிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டதுடன் கொழும்பில் தொழில் நிமித்தம் வசித்து வந்தவர்களாவர்.
இந்த நிலையில் நேற்றைய தினம் மற்றுமொரு தொகுதியினர் விடுவிக்கப்பட்டுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்ட கோபியின் தாயார் விடுவிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் கோபியின் மனைவியான சர்மிளா தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற-5)

## புலிகளுடனான ஊடகப் போரில் அரசு தோல்வி

கொழும்பு, ஏப்.15
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஊடகப் போரில் இலங்கை அரசு தோல்வியைத் தழுவியுள்ளது என்று கூறியுள்ளார் பயங்கரவாதத் தடுப்பு தொடர்பான நிபுணத்துவப் பேராசிரியர் றொஹான் குணவர்த்தன.
விடுதலைப் புலிகளின் பரப்புரைப் போராட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை இராஜதந்திரிகள் முயற்சி எடுக்காமையே அதற்கான முக்கிய காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

*விரிவான தகவல்கள் 14 ஆம் பக்கத்தில்*

## அமெரிக்க பேராசிரியர் சிவானந்தன் உரை இன்று

யாழ்ப்பாணம், ஏப்.15
அமெரிக்காவில் விருது பெற்ற தமிழ் விஞ்ஞானியும் பௌதிகவியல் பேராசிரியருமான சிவலிங்கம் சிவானந்தன் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் சிறப்புரை நிகழ்த்துகிறார்.

— *17ஆம் பக்கம் பார்க்க*


## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.15
யாழ்ப்பாணம் கட்டைப் பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் காயமடைந்துள்ளார். நல்லூர் ராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த 49 வயதான அமரசிங்கம்

— *17ஆம் பக்கம் பார்க்க*

## வருடாந்த உற்சவத்தின்போது சரிந்தது தேர்

### குருக்கள் காயம்; பக்தர்கள் மனக்கிலேசம்



யாழ்ப்பாணம், ஏப்.15
வருடாந்த தேர்த் திருவிழாவின் போது ஆலயத்தின் தேர் சரிந்து விழுந்ததில் ஆலயக்குருக்கள் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று கலட்டி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழாவின்போது இடம்பெற்றது.
ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று புதுவருட தினத்தில் முற்பல் 11.30 மணியளவில் இடம்பெற்றது. தேர் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் ஆலய வீதியை சுற்றி வந்து கொண்டிருந்த போது தேரின் அச்சில் ஏற்பட்ட கோளாறினால் பின்வீதியில் வந்துகொண்டிருந்தபோது தேர் சரிந்து

*17ஆம் பக்கம் பார்க்க*

## இலங்கையின் நிராகரிப்பே பயண இரத்துக்கு காரணமாம்



லண்டன், ஏப்.15
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் நடத்தப்பட உள்ள விசாரணைகளை

— *17ஆம் பக்கம் பார்க்க*

## மாத்தறை பெண்சாவு: சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.15
விஸ்வமடு 12ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் 13ஆம் திகதி கிணற்றில் மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்ட மாத்தறையை சேர்நத

— *17ஆம் பக்கம் பார்க்க*

## பாதுகாப்பு பணியாளர்களின் விவரம் திரட்டும் சீருடையினர்

### வடமாகாண சபை திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.15
வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளின் அலுவலகங்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுபவர்களின் விவரங்கள் சீருடையினரால் கடந்த சில தினங்களாகத் திரட்டப்பட்டு வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

*17ஆம் பக்கம் பார்க்க*

## தினக்குரல் செய்தியாளர் நேற்றுத் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 15
தினக்குரல் பத்திரிகையின் கரவெட்டிப் பிரதேச செய்தியாளர் நேற்று இரவு 8.45 மணியளவில் பருத்தித்துறை வீதியில் புறாப்பொறுக்கி ஆலடி சந்திக்கும் மண்டான் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார் என தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் வி.அற்புதானந்தன் தெரிவித்தார். தாக்குதலுக்கு இலக்கானவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த எஸ். செல்வதீபன்

*17ஆம் பக்கம் பார்க்க*

## இலங்கை தொடர்பில் மெய்யான கரிசனை

### பிரிட்டன் கூறுகின்றது

லண்டன், ஏப்.15
இலங்கை தொடர்பாக மெய்யான கரிசனை கொண்டுள்ளோம் என்று அறிவித்துள்ளது பிரிட்டன். அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயார் இதனைத் தெரிவித்துள்ளார்.
பெரியளவிலான குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகள் சொற்ப அளவிலேயே இலங்கையில் இடம் பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ள அவர், பொதுநலவாய நாடுகள் அமைப்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட

*17ஆம் பக்கம் பார்க்க*

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அகதிகளுக்கு ஆதரவாக மெல்பேர்ணில் கவனவீர்ப்பு

மெல்பேர்ண். ஏப்.15

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகர்ப்பகுதியில் அகதிகளுக்கு ஆதரவாகப் பொதுக் கூட்டமும் கவனவீர்ப்புப் பேரணியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா அரசு புகலிடக் கோரிக்கையாளர்களை நடத்தும் முறையை எதிர்த்தும், அவர்கள் தொடர்பில் ஆஸ்திரேலிய அரசின் கொள்கையையும் அணுகு முறையையும் விமர்சித்தும் அகதிகளுக்கு ஆதரவாக இந்தப் பேரணி நடத்தப் பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மெல்பேர்ண் நூல் நிலையம் முன்பாகப் பொதுக் கூட்டத்துடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றியிருந்தனர்.




கவனவீர்ப்பு நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள்

குருத்தோலை ஞாயிறன்று விக்ரோறியா மாநிலத்தின் கிறிஸ்தவ மத அமைப்புக்கள் பலவும் முழுமூச்சாக இந்தப் பேரணிக்குத் தமது ஆதரவை நல்கி திரண்டிருந்தன. பெருமளவான தேவாலயங்களில் அகதிகளுக்கு ஆதரவாக மணியொலிகள் எழுப்பப் பட்டன. கிறிஸ்தவ அமைப்புக்கள் அகதிகள் தொடர்பில் தமது அக்கறையையும், ஆஸ்திரேலிய அரசின் அகதிகள் மீதான அணுகுமுறை தொடர்பாக தமது விமர்சனத்தையும் வெளிப்படையாக அறிவித்து இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டன.

வழமைபோல் அகதிகள் விடயத்தில் தீவிரமாகப் போராடிவரும் இடதுசாரி அமைப்புக்கள், பொதுநல அமைப்புக்கள், மனிதவுரிமை அமைப்புக்கள் என்பனவும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டன.

ஆஸ்திரேலியாவின் மூன்றாவது பெருங்கட்சியான கிறீன் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மெல்பேர்ண் நகரின் பிரதான வீதி வழியாகச் சென்ற இந்தப் பேரணியில் பத்தாயிரம் வரையானோர் பதாகைகளை ஏந்தி வந்ததோடு, அகதிகளுக்கு ஆதரவாகவும் ஆஸ்திரேலிய அரசுக்கு எதிராகவும் முழக்கமிட்டனர். (வ)

## இலங்கைத் தமிழர் நலனுக்கு முன்னுரிமை

**மோடி உறுதி**



நரேந்திர மோடி

சென்னை, ஏப்.15

இலங்கை, மலேசியா, பிஜி போன்ற நாடுகளில் உள்ள தமிழ் மக்களின் நலத்திட்டங்களுக்கு இந்திய அரசு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று, பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால், இதனை நிறைவேற்றும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

சென்னையில் ஞயிற்றுக்கிழமை இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவுக்கு அடிபணியாத இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தொடர்பில் கடுமையான அணுகு முறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## அச்சுவேலி ப.நோ.கூ.ச. நெறியாளர் குழுத் தேர்தல் மே 20 இல்

அச்சுவேலி, ஏப்.15

வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுவில் இடம்பிடிப்பதற்கு இரண்டு அணிகள் களத்தில் இறங்கியுள்ளன. நெறியாளர் குழுவுக்கான தேர்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான நெறியாளர் குழுவுக்கான தெரிவுகள் கடந்த 30 வருடங்களாக போட்டி இன்றி ஏகமனதாக நடைபெற்று வந்தன. இந்த முறை போட்டி நிலை உருவாகியுள்ளது. இரண்டு அணிகள் போட்டியிடுவதற்கு முன் வந்துள்ளன. இந்த வகையில் இரண்டு அணிகளாக 14 பேர் தங்களை அறிமுகம் செய்து பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-11)

# இலங்கைப் பொருள்களை புறக்கணிக்கத் தீர்மானம்?

நாடு கடந்த தமிழீழ அரசு மே 18 இல் கூடுகிறது

லண்டன், ஏப்.15

இலங்கைப் பொருள்களை புறக்கணிக்கும் வேலைத் திட்டம் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசு ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை செய்யும் வகையில் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி பிரிட்டனில் ஒன்று கூடவிருப்பதாகப் பிரதமர் வி.உருத்ரகுமாரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைச் சர்வதேச நாடுகள் அறிந்துக் கொள்வதற்காக, சமாதானமானதும், ஜனநாயகமானதுமான வழிகளில் நாடு கடந்த தமிழீழ அரசு போராடும் என்றும் அவர் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், இலங்கைப் பொருள்களைப் புறக்கணிக்கக் கோரும் முன்னெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு எதிராக இலங்கை அரசு விடுத்துள்ள தடைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (வ)



*வண்ணை ஸ்ரீ காமாட்சியம்மன் (நாச்சிமார் கோவில்) ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று திங்கட் கிழமை பகல் இடம்பெற்றது.*

*அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க அடியவர்கள் வடம் பிடித்து தேரை வீதிவலமாக இழுத்து சென்றார்கள். இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். (86)*

# வாழ்க்கை, வசதிகளில் மாற்றம் செய்யாமல் புவி வெப்பமடைதலைத் தவிர்க்க முடியுமாம்

வாழ்க்கை வசதிகளில் மாற்றம் செய்யாமலேயே பேரழிவைத் தரக்கூடிய புவி வெப்பமாதலைத் தவிர்க்க முடியும் என்று காலநிலை மாற்றம் குறித்த ஐ.நாவின் அரசுகளுக்கிடையிலான குழுவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பெற்றோலிய எரிபொருளைப் பயன்படுத்தலை பெரியளவில் குறைப்பது தாக்குப் பிடிக்கக் கூடிய ஒன்றே என்று புதிய ஐநா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

தூய்மையான, மீண்டும் பயன்படுத்தக் கூடிய ஆதாரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட எரிபொருளை நோக்கியும் மற்றும் எரிபொருள் வீணாதலைக் குறைக்கவும் நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய வேண்டும் என்று அது பரிந்துரைத்துள்ளது.

இதனால், சற்றுத் தாமதமான பொருளாதார வளர்ச்சி ஏற்படுமே ஒழிய, பெரும் தியாகத்தைச் செய்ய வேண்டிய நிலை வராது என்றும் அந்தக் குழு கூறியுள்ளது. (வ)

# புலிகள் மீதான தடைக்கு காரணம் ஜெயலலிதாவே

குற்றம் சாட்டுகிறார் வீரமணி

சென்னை, ஏப்.15

தமிழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகவே, இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளதாக திராவிடர் கழகத்தின் தலைவர் கீ.வீரமணி குற்றம் சாட்டியுள்ளார்.



வீரமணி

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் எப்போதும் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்திராத ஜெயலலிதா, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகவும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார்.

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்யுமாறு கோரியவரும் ஜெயலலிதா தான்.

ஆனால் தற்போது அவர் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ளதைப் போல நடித்து, ஏனையவர்கள் மீது குற்றம் சுமத்தி வருகிறார்" - என்றார். (வ)

# இந்திய வெளியுறவுக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும்

சீமான் தெரிவிப்பு

சென்னை, ஏப்.15

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தஞ்சை திலகர் திடலில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

"ஈழத்தமிழர்களின் படுகொலையை முன்னின்று நடத்தியது காங்கிரஸ் கட்சி. இதற்குத் துணையாக இருந்தது தி.மு.க. இந்தியாவின் வெளியுறவு கொள்கையை மத்திய அரசு ஆதரிக்கிறது. ஆனால் ஈழத்தில் தனித் தமிழீழம் அமைய வேண்டும் என்றால் மத்திய அரசு எதிர்க்கிறது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாற்றத்தால்தான் எமது தேசத்தின் முழு விடுதலையை நாம் பெறமுடியும். அப்போது தான் எமது நாட்டுக்கு என்று நாம் எதையும் செய்து கொள்ளமுடியும்.

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கவேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா.



சீமான்

மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை காங்கிரஸ் கட்சி கொண்டு வந்தது. இதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது மு.க.ஸ்டாலின். இந்தத் திட்டம் நிறைவேறினால் டெல்டா மாவட்டம் பாலைவனமாகிவிடும் என்று கருதி, உயர் நீதிமன்றம் வரை சென்று தடுத்து நிறுத்தியவர் முதல்வர் ஜெயலலிதா."- என்றார். (வ)

# அதிபர், ஆசிரியர் விவரம் இணைய வழி இணைப்பு

## மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.15
வடக்கு மாகாண பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர் ஆளணி விவரம், வகை மாதிரியாக கணினிமயப்படுத்தப்பட்டு இணைய வழி மூலம் மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் உள்ளிட்ட நிர்வாக நிலையங்களுடன் இணைப்பு செய்யப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் ஆசிரியர், அதிபர் ஆளணியின் தகவல்களைத் திரட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டதோடு சரியான தகவல்களை உரிய வேளையில் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. பாடசாலை ரீதியில் கோட்டக் கல்வி அலுவலக மட்டத்தில் ஆசிரியர், அதிபர்களின் ஆளணி விவரம் கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதால் உடனுடக்குடன் மிகச் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பொருத்தமான முறையில் கையாளுவதற்கும் வசதி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த வகையில் அதிபர்கள் தமது பாடசாலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கும் விவரங்கள் பதிவு நிரல்படுத்தப்பட்டிருக்கும் தகவல்களுடன் ஒப்புநோக் கப்பட்டு சீர்செய்வதற்கும் தேவையான வகையில் அதிபர், ஆசிரியர் ஆளணியை சீர்செய்வதற்கும் குறுகிய காலப் பகுதியில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக இருந்ததோடு எதிர்பாராத தவறுகளும் ஏற்பட்டு வந்தன.
ஆசிரியர்- அதிபர்களின் சேவை விவரங்களோடு கூடிய நிலையில் தகவல்கள் நிரல்படுத்தப்பட்டிருப்பதால் பொருத்தமான சேவை நிலையைக் கண்டறிந்து இடமாற்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருப்பதாக மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-11)


மண் சட்டி விற்பனையில் ஈடுபடும் பெண்ணொருவர்...

## சித்திரைப்பூரணை விரதத்தையொட்டி மண் சட்டி விற்பனை யாழில் அமோகம்

யாழ்ப்பாணம், ஏப்.15
சித்திரைப் பூரணை விரதத்தை முன்னிட்டு வன்னிப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான மண் சட்டிகள் விற்பனைக்காக குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.
எடுத்துவரப்பட்ட மண் சட்டிகள் குடாநாட்டின் பல் வேறு சந்தைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.
திருநெல்வேலி சந்தையில் மண் சட்டிகளை நுகர்வோர் ஆர்வம் காட்டி வாங்கிச் சென்றனர். (வ-17)


## அனுமதியின்றி வடலி ஓலை வெட்டியோர் தப்பியோட்டம்


வெட்டி வீழ்த்தப்பட்ட வடலி ஓலைகள்

யாழ்ப்பாணம், ஏப்.15
நிழல் தரும் பனை வடலிகளின் ஓலைகளை அனுமதியின்றி வெட்டியவர்கள் போக்குவரத்துப் பொலிஸாரால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் செம் மணி வீதியில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-
செம்மணி வீதியில் கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் நிழலுக்காக நடப்பட்ட பனை விதைகள் வடலிகளாக இன்று நிழல் தந்து கொண்டிருக்கும் நிலையில், இவற்றின் ஓலைகளை வெட்டுவதற்காக கும்பல் ஒன்று கடந்த வாரம் இப்பிரதேசத்துக்கு வந்து தாறுமாக ஓலைகளை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தனர். வீதியால் சென்ற பொதுமக்கள் பலரும் வடலிஓலைகளைவெட்டவேண்டாம்' என்று தெரிவித்தபோதிலும் அவற்றைச் செவிமடுக்காது பொதுமக்களை அச்சுறுத்திவிட்டு தொடர்ந்து வெட்டிக் கொண்டிருந்ததுடன் வெட்டிய ஓலைகளையும் டிராக்டரில் ஏற்றிக் கொண்டும் இருந்தனர்.
இந்த நிலையில் அந்த வீதியால் பயணம் செய்த அரச ஊழியர் ஒருவர் உடனடியாக செம்மணி யாழ்.வரவு வளைவுக்குச் சென்று அங்கு கடமையில் இருந்த போக்குரத்து பொலிஸாரிடம் இது குறித்து முறையிட்டார். அதை அடுத்து பொலிஸார் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்து அனுமதியின்றி ஓலை வெட்டியவர்களை விசாரணை செய்த பின் இவ் வீதியில் உள்ள பனை வடலிகளில் இனிமேல் ஓலை வெட்ட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்ததுடன் வெட்டிய ஓலைகளை மட்டும் எடுத்துச் செல்லுமாறு கூறிவிட்டு சென்றுவிட்டனர்.
ஆனால் அந்தக் கும்பலோ தொடர்ந்தும் ஓலைகளை வெட்டியவாறே நின்றனர். இது குறித்து மீண்டும் அறிந்த பொலிஸார் மீண்டும் சம்பவ இடத்துக்கு வந்த வேளை ஓலை வெட்டிய கும்பல் பொலிஸாரைக் கண்டதும் உடனடியாக வயல் வெளிகளுக்கூடாகத் தப்பி ஓடிவிட்டனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கையை வீதியால் சென்ற பொதுமக்கள் பலரும் பாராட்டினார்கள். தற்போதும் பொலிஸார் இவ்வீதியில் பயணித்து பனை வடலிகளை பார்வையிட்டுச்செல்வதையும்காணக் கூடியதாகவுள்ளது. (வ-288)

## நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் பாதீனியப் பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.15
நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் தற்போதைய வறட்சியான காலப் பகுதியிலும் கூட பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.
கடந்த டிசெம்பர் , ஜனவரி ஆகிய மாதங்களில் சிரமதானம் மூலம் பாதீனியம் அழிக்கப்பட்டும் கூட அவை மீண்டும் அதிக இடங்களில் பெருகிக் காணப்படுகின்றது.


பெருகிக் காணப்படும் பாதீனியக் களைகள்

விவசாய செய்கைக்கு அச்சுறுத்தலாகக் காணப்படும் இந்தப் பாதீனியக் களைகள் மீண்டும் பெருகி வளர்ந்து காணப்படுகின்றன.
குறிப்பாக கோப்பாய், இராச வீதி, கரந்தன் மற்றும் நீர்வேலி போன்ற விவசாய நிலங்களைப் பாதீனியக் களை பல்கிப் பெருகி ஆக்கிரமித்துள்ளது.
தற்போதைய வறட்சியான காலப் பகுதியிலும் கூட அவை பெருகிக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.
வடமாகாண விவசாய அமைச்சு பாதீனியத்தை அழிப்பதற்கு விசேட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-17)


பாஷையூரிலிருந்து மணியந்தோட்டம் கர்த்தர் கோயிலுக்குக் கடந்த வெள்ளிக் கிழமை சென்ற சிலுவைப் பாதைப் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட இயேசு சிலுவை சுமந்த திருவுருவக் காட்சி. (ஓ-135)

## சேதமடைந்த கிணறுகளை புனரமைக்க நடவடிக்கை

தென்மராட்சி, ஏப்.15
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பு பிரிவில் விவசாய நிலங்களில் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ள கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.
பயிர்களுக்கு நீர் இறைக்கும் கிணறுகளில் சிதைவடைந்த, சிமெந்தால் கட்டப்படாத, எறிகணைத் தாக்குதல்களால் சேதமடைந்த கிணறுகளே புனரமைக்கப்படவுள்ளன.
இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள கிணறுகளைப் புனரமைப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைத்துள்ளன. இப்படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அமைப்பின் செயலாளர் வி.கே. வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

## கடன் பிரச்சினையால் உயிரை மாய்த்த நபர்

யாழ்ப்பாணம், ஏப். 15
வட்டிக்குப் பணம் கொடுத்தும் லீசிங்கில் வாகனக் கொள்வனவு செய்தும் வந்த நபரொருவர் கடன்பிரச்சினைகாரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகி தூக்கில் தொங்கி உயிர் துறந்தார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் துன்னாலை கிழக்கில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 65 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்தார். அவர் பலருக்கு வட்டிக்குப் பணம் கொடுத்திருந்தார். எனினும் பலர் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. தவிர லீசிங் முறையில் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்திருந்தார் என்றும் அவர் வாகனத் தரகர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுஎன்றுபொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

## பொருத்தமில்லாத இடங்களில் பஸ் தரிப்பிடக் குறியீடுகள்

### சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பிப்பு

ஏ-9 வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் பொருத்தமில்லாத இடங்களில் பஸ் தரிப்பிடக் குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
ஏ-9 வீதியில் நீண்ட காலமாக பயணிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த பஸ் தரிப்பிடங்களில் மக்கள் காத்து நிற்பதாகவும், ஆனால் பஸ் தரிப்பிடம் வேறு இடத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் பயணிகள் வாகனங்கள் முன்னைய தரிப்பிடங்களில் நிறுத்தாமல் செல்கின்றன. இதனால் பயணிகள் நலன்கருதிநீண்டகாலமாகமக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த பஸ் தரிப்பிடங்களில் பஸ் தரிப்பிடக் குறியீடுகளைப் பொருத்த வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் கா.சற்குணதேவன் தனி நபர் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.
இதன்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

யூனியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

7 பேர், 7 ஓவர் கொண்ட மென்பந்து சுற்று

தொடர்பு - 077 2077605, 077 9176811, 077 3554677 உயரப்புலம், ஆனைக்கோட்டை

# இரத்ததானம் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ். நகர் மைய றோட்டரக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சைவ பரிபாலன சபை மண்டபத் தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் விருப்பமுள்ளவர்கள் பங்கு கொண்டு உயிர் காக்கும் பணி யில் இணைத் துக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (400)

## காணவில்லை



நீர்வேலி தெற்கைச் சேர்ந்த **முத்து நட்சத்திரம்** என்பவரை நேற்று அதிகாலையில் இருந்து காணவில்லை.

குறிப்பு :

சாம்பல் கலர் சறம் அணிந்திருந்தார் மனநிலை குழம்பிய நிலையில் காணப்பட்டார்.

இவர் தொடர்பான தகவல் தெரிந்தால் தகவல் தந்துதவவும்.

தொடர்பு : 077 5284535, 077 8575092, 077 0344141

## மீனவர் பிரச்சினை நீடிப்பதற்கு தமிழக அரசுதான் காரணமாம்

### *இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கூறுகின்றார்*

இந்திய- இலங்கை மீனவர்க ளுக்கிடையிலான பிரச் சினை நீடிப்பதற்கு தமிழக அரசுதான் காரணம். பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழக அரசு பின் னடிக்கின் றது - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன். இராமநாதபுரம் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி வேட் பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார் ஜி.கே.வாசன். நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரு நாட்டு மீனவர்களது பிரச்சினைகள் தொடர்ந்து தீர்வு காணப்படாமல் இழுத்தடிப்புச் செய்வதால் மீனவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இந்திய தமிழக அரசு இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்து கொண்டே வருகிறது. மீனவர்களது தாக்குதல் சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது இரு நாட்டு அரசின் பின்புலத்தில் அப்பாவி மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள் ளார்கள்.

பேச்சு நடத்துவதற்கும் தமிழக அரசு பின் நிற்கிறது. இலங்கை கடற்படையினரால் கண்மூடித்தனமாக தமிழக மீனவர்கள் தாக்கப்படுகின்றனர். தற்போதைய தேர்தல் காலத்திலாவது இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து சிவராசா (பாபு மாஸ்டர்)

(ஓய்வுபெற்ற உப அதிபர், அருணோதயாகல்லூரி, அளவெட்டி)



கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவராசா நேற்று (14.04.2014) திங்கட்கிழமை இறை பதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-அசுபதி தம்பதியரின் ஏக புதல்வரும் செல்லத்துரை காலஞ்சென்ற சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும் ரகுவர்மன், ராகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னலட்சுமி, சூரியகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரனும், மங்கயர்க்கரசி, செல்வதேவி, சாரதா, லலிதா சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை பிறபகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளானை, கொல்லங்கட்டி. (46812)(10) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அன்னலட்சுமி முருகர்



கச்சாய் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், தாவளை இயற்றா லையை வதிவிடமாகவும், அல்லாரை வடக்கு மீசாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி முருகர் நேற்று (14.04.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகரின் அன்பு மனைவியும், கனகசிங்கம், இராசநாயகம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவராசா மற்றும் செல்வராசா, ரூபாவதி, பிறேமாவதி, கமலாவதி, நவரத்தினராசா ஆகியோரின் பாசமிகு தாயும், அருண் சிதம்பரப்பிள்ளையின் (லண்டன்) அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், சுவர்ணமாலினி, செல்வநாயகி, இராசம்மா, மகேஸ்வரி, சிவராசா, செல்லத்துரை, சற்குருநாதன், ஞானகலாசெல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு அல்லாரை வடக்கு, மீசாலையில் நடைபெற்று கச்சாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரிகுளம், வவுனியா. (C/13622)(10) தகவல்: மு.கனகசிங்கம்

## மரண அறிவித்தல்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"
வெளிப்படுத்தின விசேஷம் 14:13

### திருமதி ஸ்ரெல்லா சரஸ்வதி குணபாலன் (பவானி)



இல.175 பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரெல்லா சரஸ்வதி குணபாலன் நேற்று (12.04.2014) கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணி குணபாலன் (அதிபர்) அவர்களின் அன்புமனைவியும் பாலகுமார் (ஜேர்மனி), பிறேமினி (சுவிஸ்), சுபாசினி (ஆஸ்திரேலியா), பாலதாசன் (சுவிஸ்), சுகந்தினி (ஆஸ்திரேலியா) ஆகி யோரின் பாசமிகு தாயும் வவி (ஜேர்மனி), ஜோசப் (சுவிஸ்), ஞானதாஸ் (ஆஸ்திரேலியா), பவானி (சுவிஸ்), அன்ரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற தர்மலிங்கம், அன்னம்மா, மனோன்மணி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி (லண்டன்), ஜோகேஸ்வரி, லலீலா (லண்டன்), பத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், செல்வராசா, செல்லத்துரை, பொன்னம்பலம் மற்றும் விமலாதேவி, பாலச்சந்திரன், கணேசலிங்கம் (லண்டன்), கலையரசி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமைத்துனியும் அனீஷன் (ஜேர்மனி), பற்றிக்ஷன் (ஜேர்மனி), ராகுல் (ஜேர்மனி), ஜோசுவா (சுவிஸ்), ஜோனத்தான் (சுவிஸ்), ஜோயல் (சுவிஸ்), ஜெசிக்கா (சுவிஸ்), வர்ஷா (ஆஸ்திரேலியா), சறோனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (16.04.2014) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணிக்கு தாவடி கல்வாரி சேமக்காலையில் இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 175 பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P : 021 2212120

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27.07.1963 — மறைவு 16.03.2014

### இளையவி குண்டுமணியம்



அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழ வைத்த தெய்வமே
நித்தமும் உங்களது ஆத்மா
சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

54/11 சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

நிர்மலா (மனைவி),
சுதேசன் (நிமால் மகன்),
டஸ்னி (மகள் - கைதடி)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மூத்த ஆசிரியர்

### திருமதி ஜெயலஷ்மி தவலிங்கம்



அவர்கள் (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தமையையிட்டு மீளாத்துயரில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. (46809)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவாம்பிகை தியாகர்ராசா

(கந்தரோடை)



கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாம்பிகை தியாகராசா நேற்று முன்தினம் (13.04.2014) ஞாயிறு இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் முழுவிவரமும், இறுதிக்கிரியை பற்றிய விவரமும் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை, சுன்னாகம்.
021 224 0393 (46805)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நடராஜா அருளானந்தம்



வேதவனம் வளவு, துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நடராஜா அருளானந்தம் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் நடராஜா-பாக்கியம் தம்பதியரின் பாசமிகு புதல்வரும், தவமணிதேவி, கருணானந்தன், சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும், கேசவன் (London), மிதுலா (நூலகம், யாழ் பல்கலைக்கழகம்), சுதேஷன் (London), றமேஷன் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,நிறஞ்சினி, சிவசங்கர் (நூலகம், யாழ் பல்கலைக்கழகம்), சுபாஜினி, கமிலா ஆகியோரின் அன்பு மாமனும், ராகவி, பிரணவி, நிரேன், சிவானுஜன், சுரதீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
துன்னாலை. (46807)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிர்காமநாகராசா ஜெயகௌரி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கில் வசித்துவந்தவருமாகிய கதிர்காமநாகராசா ஜெயகௌரி நேற்று (14.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், கதிர்காமநாகராசாவின் (மயூரன்) பாசமிகு மனைவியும் தேனுக்கா, காலஞ் சென்ற கீர்த்தனன், அபினயா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (46806)(10)

தகவல் :
மயூரன்.

# உணவு விஷமாகியுள்ளதால் 50 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு.ஏப்.15

நுவரெலியா, பூண்டுலோயா தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு உணவு உட்கொண்ட பின்னர் திடீர் சுகவீன முற்ற 50 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த பகுதியிலுள்ள மத வழிபாட்டுத் தலமொன்றிலேயே நேற்றுமுன்தினம் இரவு உணவு பரிமாறப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது சுமார் ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோர் இந்த உணவை உட்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். உணவை உட்கொண்ட பின்னர் வயிற்று வலியால் அவதியுற்ற 50 பேர் கொத்மலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை குறித்து கவலையடையத் தேவையில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

> **வயிற்று வலியால் அவதியுற்ற 50 பேர் கொத்மலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

# 1955 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யுங்கள்

## விசேட பஸ் சேவைகள் தொடர்பில்

கொழும்பு.ஏப்.15

சித்திரைப் புத்தாண்டுக்கான விசேட பஸ் சேவைகள் தொடர்பில் 1955 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

தனியார் பஸ்கள் தொடர்பில் இந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 24 மணித்தியாலங்களும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்று ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக்க துஷ்யந்த தெரிவித்தார்.

பஸ் சேவை அல்லது பஸ் ஊழியர்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின், 1955 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தெரிவிக்க முடியும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முறைப்பாடு முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பஸ்ஸுடன் தொடர்பினை ஏற்படுத்தி, தவற்றைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் அவசியமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 0112 59 55 55 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தனியார் பஸ்கள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது. (ச)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
திருமுருகன் கொம் நெற்
சித்திரைப் புத்தாண்டு விசேட சலுகைகளுடன்...
மிகக் குறைந்த கட்டணத்தில் 220 ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை
அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பண்டங்களை
வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
3-5 நாள்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விசா விண்ணப்ப சேவை

WESTERN UNION | MMBL Money Master
வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக
பணத்தினைப் பெற்றுக்கொள்ள
இல.271 A , கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே: 021 222 7835
பிரதான கிளைகள்:
இல.18, பிரதான வீதி, நெல்லியடி
இல.46, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
பிரதான வீதி சங்கானை
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
முதல்தரமான BAIHARA
இறைச்சிக் கோழிக்குஞ்சு மலிவு
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு கோழிக்குஞ்சின்
விலை 95/= ரூபா

சனிக்கிழமை தோறும் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
விவரங்களுக்கு: ரவி
நெல்லியடி. 077 995 9382; 077 906 9298

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
தவம் போட்டோ
அல்பம்ஸ், கலர் லாப், ஸ்ரூடியோ
இலங்கையிலேயே முதன்முறையாக எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜப்பான் தயாரிப்பிலான உயர்தரமான இருபக்கப் படப்பிரதியாக்கும் இயந்திரத்தின் மூலம் நீர் உட்புகாத, காலத்தால் கலர் மாறாத அழியாத, கிழியாத பாரம் குறைந்த அல்பங்களை நூறு வருட உத்தரவாதத்துடன் எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றோம் என்பதனை இந்நாளில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.
குறிப்பு: எமது பரிணாம வளர்ச்சியில் தற்போது எமது புதிய கட்டடத்தில் ஸ்ரூடியோ, கலர் லாப் ஆகிய சேவைகளை ஆரம்பித்துள்ளோம்.
இல.167, நாவலர் வீதி, இல.362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Premium American
Just drink it !
ESP
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
587, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். T.P: 021 221 7277

யாழ் மண்ணில் இருந்து இணையத்தளத்தின் ஊடாக உலகம் முழுவதும் உள்ள அனைவரையும் சந்திக்கும்
சுடர் fm இன் சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.
2014
சுடர் Fm இன் இரட்டிப்பு கொண்டாட்டம்
சுடரின் 1வது பிறந்த தினம் மற்றும்
தமிழ் சிங்கள புத்தாண்டு ....
இணையத்தளத்தில் மட்டும்
Happy New year
சுடர் Fm கேளுங்கள் ...
கேட்டுப்பாருங்கள் ...
கேட்டுக்கொண்டே இருங்கள் ...
www.sudarfm.com

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் கரத்தில்
16.05.1947

ஆண்டவன் தாளில்
21.04.2008

திதி:
அபரபக்க பிரதமை

## திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் ஆறு
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா!
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே சென்றாய்?
எம் உயிர் உள்ளவரை உம் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடைய
இறைவனடி வேண்டுகின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(46663)(2.6)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நைஜீரியாவில் குண்டுத் தாக்குதல் பலர் சாவு

அபுஜா,ஏப் 15

நைஜீரியத் தலைநகர் அபுஜாவின் புறநகர்ப் பகுதியில், சன நடமாட்டம் மிக்க பஸ் நிலையம் ஒன்றில் இரு குண்டுகள் வெடித்துள்ளன.

பலர் அதில் கொல்லப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

நகருக்குச் செல்வதற்கான பயணிகளால் அந்த யான்யா பஸ் நிலையம் நிரம்பிக் காணப்பட்டது.

இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் அம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றன.

ஒரு மருத்துவமனையில் மாத்திரம் 20 பேரின் சடலங்களைப் பார்த்ததாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவான போக்கோ ஹறாமை குற்றஞ்சாட்டுவதற்கான சாத்தியம் இருப்பதாக பிபிசி செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தலைநகரில் வேறு பல தாக்குதல்களை அந்த அமைப்பு நடத்தியுள்ளது.

(த)



கத்தோலிக்கர்கள் நேற்று முன்தினம் குருத்தோலை ஞாயிறுடன் உலகம் முழுவதிலும் உள்ள தேவாலயங்களில் புனித வார வழிபாடுகளை ஆரம்பித்தனர். ரோமில் உள்ள சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் நடைபெற்ற குருத்தோலை ஞாயிறு வழிபாட்டில் பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் கலந்துகொண்டார். இதில் 10 ஆயிரத்துக் கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். (த)

# ரஷ்ய நெருக்கடியின் எதிரொலி ஜோ பிடன் உக்ரைன் பயணம்



வாஷிங்டன்,ஏப் 15

எரிசக்தி விநியோகம் தொடர்பாக உக்ரைனுக்கு ரஷ்யா அளித்துவரும் நெருக்கடி குறித்து விவாதிக்க அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பிடன் இம்மாதம் 22 ஆம் திகதி அந்நாட்டுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

இது குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உக்ரைன் பயணத்தின்போது துணை அதிபர் பிடன், அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய ஆதரவாளர்களின் அத்துமீறலுக்கு வெளிப்படையாக ரஷ்யா அளித்து வரும் ஆதரவு, எல்லையில் ரஷ்யா படைகளைக் குவித்துள்ளதால் நிலவும் போர்ப் பதற்றம், எரிசக்திப் பாதுகாப்பு ஆகியவை குறித்து அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புக் குழுவினர் ஆகியோரிடம் ஆலோசிக்கிறார்.

அப்போது, ஜனநாயக நாடான உக்ரைன் தனது சொந்த விருப்பப்படி எதிர்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அமெரிக்கா முழு ஆதரவளிக்கும் என்பதை அவர் உறுதிப்படுத்துவார்.

மேலும், உக்ரைனின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது, ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது, அரசமைப்பில் சீர்திருத்தம் மேற்கொள்வது, ஊழல் தடுப்பு மற்றும் அடுத்த மாதம் 25ஆம் திகதி அந்நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது உள்ளிட்டவற்றுக்கு உதவும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமுதாயம் உதவ வேண்டும் என்று வலியுறுத்துவார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட உக்ரைனின் முன்னாள் அதிபர் விக்டர் யானுகோவிச், தன் நாட்டை விட்டு வெளியேறிய பிறகு அதன் புதிய தலைவர்கள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் உதவியை கோரினர்.

இந்நிலையில், உக்ரைனில் தன்னாட்சிப் பிராந்தியமான கிரைமியாவைக் கைப்பற்றியதுடன், பொதுவாக்கெடுப்பு மூலம் தனது நாட்டுடன் அதனை இணைத்துக் கொண்டது.

மேலும், டொனெட்ஸ்க் நகரில் அரசுக் கட்டடங்கள் மற்றும் ஒரு காவல் நிலையத்தை ரஷ்ய ஆதரவாளர்கள் சில தினங்களுக்கு முன் கைப்பற்றிக் கொண்டனர்.

எரிசக்தித் தேவைக்குத் தன்னை நம்பியுள்ள உக்ரைனுக்கு எரிவாயு விலையை உயர்த்திப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி வருவதுடன், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு எல்லையில் படைகளைக் குவித்து ரஷ்யா பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே, உக்ரைன் மீது ரஷ்யா தன்னிச்சையாக மேற்கொண்டு வரும் இத்தகைய நடவடிக்கையைத் தொடர்ந்து அந்நாட்டின் மீது மேற்கத்திய நாடுகளும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. (த)

# பொன்னாசையில் மண்ணை தோண்டியவரின் கதி என்ன?

இஸ்லாமாபாத்,ஏப் 15

பாகிஸ்தானில் ஓட்டோக்காரர் ஒருவர், அவருடைய உள்ளூர் சாமியார் ஒருவர் அவர் வீட்டின் அடியில் பெரும் புதையல் இருக்கிறது என்று சொன்னதை நம்பிச் சுரங்கம் தோண்டிப் புதையலைத் தேடப்போய், இப்போது அந்தச் சுரங்கத்தில் இரண்டு நாள்களாக வெளியே வரமுடியாமல் சிக்கியிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

அவரை மீட்கும் வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும், அவர் உயிருடன் இருப்பார் என்ற நம்பிக்கைகள் குறைவாகவே இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் முல்டான் நகரில் வசிக்கும் 22 வயது ஸீஷான் குரேஷி என்ற ஓட்டோக்காரர் அவருடைய வீட்டில் தங்கமும் வெள்ளியும் அடங்கிய புதையல் இருக்கிறது என்று அவருடைய ஆன்மீகத் தலைவர் சொன்னதை அடுத்து, அந்தச் சொந்த வீட்டுக்குள்ளேயிருந்து தரையைக் கடந்த சில மாதங்களாகத் தோண்ட ஆரம்பித்தாராம்.

கடந்த சனிக்கிழமையும், இதே போல கருவிகளுடன் சுரங்கத்துக்குள்ளே அவர் சென்றிருக்கிறார்.

ஆனால் நள்ளிரவு வரை அவர் திரும்பி வராததால், அவரது தந்தை அவசர உதவிச் சேவை பணியாளர்களை அழைத்திருக்கிறார்.

ஆனால் மீட்புப் பணியாளர்களோ, அவர் தோண்டிய இந்த சுமார் 12 மீற்றர் நீளமுள்ள சுரங்கம் இடிந்து விழுந்திருக்கக்கூடும். அந்த இடிபாடுகளில் ஸீஷன் குரேஷி சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கிறார்கள்.

இந்தச் சுரங்கத்தில், புதையல் எதுவும் கிடைக்காதது மட்டுமல்ல, இந்த சுரங்கம் தோண்டிய வேளையில், ஸீஷானின் வீட்டின் அஸ்திவாரமும், அதே போல அண்டை வீடுகள் சிலவற்றின் அஸ்திவாரமும் பலவீனமடைந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது.

சுரங்கத்திலிருந்து ஸீஷானை மீட்கும் வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும், அவர் உயிருடன் இருப்பார் என்ற நம்பிக்கைகள் குறைந்துகொண்டே வருகின்றன.

(த)

## சிரியப் படைகள் முன்னேற்றம்

"கடந்த மூன்று வருடங்களாக சிரியாவில் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது.

டமஸ்கஸ்,ஏப் 15

சிரியாவின் உள்நாட்டுப்போரில் அரச படைகள் முன்னேற்றம் கண்டு வருவதாக ஜனாதிபதி பஸார் அல் அசாத் தெரிவித்துள்ளார்

கடந்த மூன்று வருடங்களாக சிரியாவில் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது.

இந்தநிலையில் டமஸ்கஸ் பல்கலைக்கழக நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய சிரிய ஜனாதிபதி, தமது படைகள் போராளிகளின் பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்

சிரியபோரில், இதுவரை 150,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர். சிரியப் படைகளுக்கு ரஷ்ய ஆதரவு கிடைத்து வருகின்ற நிலையில் போராளிகளுக்கு மேற்கு நாடுகளின் உதவி கிடைத்து வருகிறது.

(த)

# அவசர உதவி கோரி அழைத்தாரா துணை விமானி?

கோலாலம்பூர்,ஏப் 15

மலேசிய விமானம் பீஜிங் நோக்கிப் பறக்க ஆரம்பித்த ஒரு மணி நேரத்தில் துணை விமானி தனது கையடக்கத் தொலைபேசியில் இருந்து அழைப்பு மேற்கொண்டார் என்றும், அதன் பின்னரே ராடர் பதிவிலிருந்து விமானம் மாயமானது என்று தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து மலேசிய நாளிதழ் 'நியூ ஸ்ட்ரெய்ட்ஸ் ரைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியில், விமானம் ராடர் பதிவிலிருந்து மாயமாவதற்கு முன்னர் அதன் துணை விமானி தனது கையடக்கத்தொலைபேசியில் இருந்து அழைப்பு ஒன்றை மேற்கொள்ள முயற்சித்தார்.

ஆனால் விமானம் அதிக வேகத்தில் பயணித்ததால், தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. துணை விமானி மேற்கொண்ட அழைப்பு உதவிக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக 'சோனார்' நீர்முழ்கி இயந்திரத்தில் சில இடைவேளிகளில் பதிவான சிக்னல்கள் தற்போது நின்று விட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் கறுப்புப் பெட்டியின் மின்கலம் காலாவதி ஆகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.




விமானத்தை தேடும் நீர்மூழ்கி

விமானம் மாயமானபோது விமானி அறையில் நடந்தது என்ன, என்ன பேசப்பட்டது என்பதை அறிவதற்காக, அவற்றைப் பதிவு செய்யும் கறுப்புப் பெட்டியைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

விமானத்தின் கறுப்புப் பெட்டி இந்தியப் பெருங்கடலின் 15 ஆயிரம் அடி ஆழத்தில் இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறினர். கடந்த 5 வாரத் தேடலில் கிடைக்கப்பட்ட ஒரே உறுதியான தகவல் என்ற அடிப்படையில், விமான தேடலில் நம்பிக்கை பிறந்தது. இதனை அடுத்து தேடல் பகுதி 57 ஆயிரத்து 923 சதுர கி.மீ. பரப்பளவாக குறைக்கப்பட்டது. சிக்னல் பதிவை வைத்து கறுப்புப் பெட்டியை கண்டுபிடிக்கும் பணியில் ஓஸன் ஷீல்ட் என்னும் ஆஸ்திரேலிய போர்க் கப்பலும், 'எச்.எம்.எஸ். எக்கோ' என்னும் இங்கிலாந்தின் நீர்மூழ்கி கப்பலும் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது சிக்னல் பதிவு ஏதும் இல்லாமல் போனது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (த)

# மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்மை செயற்படவிடாது பல முட்டுக்கட்டைகள்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.15

எமது மக்கள் தமது பிரதிநிதிகளாக வடமாகாண சபைத் தேர்தலில் எம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஆனால் எம்மைச் செயற்படவிடாது அனைத்து விதமான முட்டுக் கட்டைகளும் எம் முன் போடப் பட்டுள்ளன. வடமாகாண சபையை இயங்க விடாது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதில்தான் எமது வருங்கால வளர்ச்சி தங்கியுள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.


சங்கரத்தை, கரந்தைக் குளவத்தை முருகன் கோயிலில் மணி மண்டபத் திறப்பு விழா கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"அரசு எமது செயற்பாடுகளில் தடைகளையும் தாமதங்களையும் உட்புகுவித்தால் அதற்கு மாற்றீடாக நாம் எம்முள் ஒற்றுமையாய் இருந்து எமது காரியங்களைச் சாதிக்க முயற்சிக்க வேண்டும்.

எமது வடக்கு மாகாணசபை மூலம் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக கணவனை இழந்தோருக்கு தையல் இயந்திரங்களும், ஏனையோருக்கு தண்ணீர் பம்பிகளும், கோழி, மாடு போன்ற கால் நடைகளையும் வீட்டுத் தோட்டங்கள் அமைக்க வசதிகளையும் பெற்றுக் கொடுக்கலாம்.


அவர்கள் முறையாக அவற்றைப் பாவிக்கின்றார்களா? பேணி வருகின்றார்களா? பராமரிக்கின்றார்களா? என்பதை எல்லாம் எமது அலுவலர்கள் பார்த்துக் கொள்வார்கள். எம்மை நாடிப் பலர் உதவி கேட்டு வருகின்றார்கள். வீடு கட்ட தகரங்கள் கேட்கின்றார்கள், பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் கேட்கின்றார்கள், மேற்படிப்புக்கு வசதியில்லை என்கின்றார்கள், சுயதொழில் ஆரம்பிக்கப் பணம் கேட்கின்றார்கள் மேலும் பல கோரிக்கைகளைக் கேட்கின்றார்கள். உதவி செய்ய உள்ளம் கொண்டவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் உரிய ஏற்பாடுகளை நாம் அமைத்துக் கொடுப்போம்.



க.வி.விக்னேஸ்வரன்.

நாம் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் குணாதிசயமே இன்றைய இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அவசியமாய்த் தேவைப்படுகிறது. மற்றவர்களைக் கீழே இழுத்துத் தள்ளிவிட்டுத் தான் மட்டும் முன்னேற நினைக்கும் மக்களால் எமது தமிழ் பேசும் சமூகம் முன்னேறாது. பதிலுக்கு எம் எல்லோருக்கும் அழிவைத் தேடித் தரவே அவ்வாறான நடவடிக்கைகள் இடமளிக்கும்.

நாம் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் இந்தக் கொள்கை சகல வழிகளிலும் எமக்கு நன்மை பயக்கும். இதனை உணர்ந்து நாம் செயற்படுவோமாக"- என்று தெரிவித்துள்ளார். (ற)



ஜய வருடப் பிறப்பான நேற்று யாழ். நகர வியாபார நிலையங்களில் சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை கைவிசேடத்துக்காக வரிசையில் காத்திருந்து - பலத்த இழுபறியின் மத்தியில் - பெற்றுச் சென்றனர். இழுபறிப்பட்டதில் பலர் தமது பாதணிகள் அறுந்த நிலையில் நின்றதையும் காணக் கூடியதாக இருந்தது. கைவிசேடம் வழங்காத வியாபாரிகளை சிலர் திட்டித் தீர்த்ததையும் அவதானிக்க முடிந்தது. (ஒ-21)

**மேலதிக ஒளிப்படங்கள்:**
முகநூல் www.facebook.com/uthayan.print இல்

## தீயணைப்புப் பிரிவினருக்கு சமிக்ஞை வாகனம் கையளிப்பு




யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ். மாநகர சபை தீயணைப் புப் பிரிவின் பயன்பாட்டுக்கு என சமிக்ஞை வாகனம் ஒன்று கடந்த சனிக்கிழமை வழங்கப் பட்டுள்ளது. உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள இந்த வாகனம் 8 மில் லியன் ரூபா பெறுமதியானது. ஒரு பிரதேசத்தில் தீவிபத்து ஏற்படும் பட்சத்தில் தீயணைப்பு பிரிவின் வாகனத்தை வீதியில் கொண்டு செல்லும் போது ஏற்படக் கூடிய அசௌகரியங் களுக்கு தீர்வு காணும் முகமாக இப்புதிய வாகனம் சமிக்ஞை ஒலி எழுப்பியவாறு முன்னே செல்லும்.

இந்த வாகனம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோகபூர்வமாக யாழ். மாநகர சபையிடம் கையளிக் கப்பட்டது.

அந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதன், அமைச்சின் யாழ். மாவட்ட ஒருங் கிணைப்பாளர் கே.விகுகேந் திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

### மனவளக் கலை மன்றத்தினால் யோகா வாழ்வுப் பயிற்சி

யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்றம் நடத்தும் சிறப்பு யோகா வாழ்வுப் பயிற்சிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை வரை மூன்று தினங்களுக்கு புங்குடுதீவு சர்வோதய வளாகத்தின் புஸ்பா மணிமண்டபத்தில் மனவளக் கலைப் பேராசிரியர் சி.முரு கானந்த வேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த முது நிலைப் பேராசிரியர் ஏ.எஸ். இராதாகிருஷ்ணன் பயிற்சிக் கருத்துரைகளை வழங்கு வார். இந்த நிகழ்வில் தமிழகத்தில் இருந்து வருகை தரும் மனவளக் கலைப் பேராசிரியர்கள் பதினைந்து பேரின் சிறப்பு யோகா வாழ்வுப் பயிற்சிகளும் இடம் பெறும். பயிற்சியாளர்களுக்கு மூன்று நாள்களும் வதிவிடப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஆர்வம் மிக்கவர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மனவளக் கலைமன்றம் கேட்டுள்ளது. (க-7)

### கனகபுரத்தில் மகா கும்பாபிஷேகம்

கிளிநொச்சி கனகபுரம் பால விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கர்மாரம்பம் 16 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 19 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. மறுநாள் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.40 தொடக்கம் 11.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (க)

**யா/இராமநாதன் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க**
**பொதுக்கூட்ட அழைப்பு - 2014**

யா/இராமநாதன் கல்லூரி
பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும்
புதியநிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும்
**03.05.2014 சனிக்கிழமை முற்பகல் 10.00**
மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் கல்லூரி பழைய மாணவர்கள் தவறாது வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
(46684) (12.3.6)
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.

**கேயுவின் புத்தாண்டுப் பொதி**

16/04/2014 மட்டும் 10% கழிவு

இந்த தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு கேயு மற்றும் நைற்றிங்கேல்-மலேசியா நிறுவனங்களால் வழங்கப்படும் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு 16/04/14 அன்று சேர்வோருக்கு 10% கட்டணக்கழிவு வழங்கப்படும்.

IELTS Preparation
CBM/DBM- Business Management Courses
KU's i-Spoken -International English Course
Computer Hardware Technology
SDP- Personality Development-Programme**Free

Visit : http://edu.kugroup.info

இணையத்தில் பயிற்சிநெறி பற்றிய முழு விபரங்களையும் பெறுங்கள். கேயு கல்வி நிறுவனத்தின் சர்வதேச தரம்வாய்ந்த பாடத்திட்டத்தில் தரமான சான்றிதழ்களை வெறும் பாடமாக்கலை அடிப்படையாகக்கொள்ளாத ,பிரயோக அறிவுடன் கூடிய கல்வியுடன் பெற்றிடுங்கள். கல்வியில் தரத்தைப்பேணுவோம்.

Knowledge University Sri Lanka
**KU Education**
No 626,1/1,K.K.S Road,Jaffna
Tel: 021-3208342/0777302882 (13614)

**வீடு வாடகைக்குண்டு**

பலாலி வீதியில், திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 943 5088, 077 937 2354
(46767)(4.3.6)



**வாழும் கலை பயிற்சிகள்**
மலர்ந்துள்ள "ஜய" வருட புத்தாண்டில் ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் உங்களுக்கு பரிசளியுங்கள்

ART EXCEL (6 முதல் 13 வயது வரையுடைய குழந்தைகளுக்கு)
படைப்புத்திறன், திறமை, விழிப்புணர்வு மேம்பட
காலம் : 16.04.2014 – 20.04.2014 வரை.
காலை 8 மணி முதல் 10.30 வரை.

YES! (Youth Empowerment Seminar)
(14 முதல் 17 வயது வரை)
படைப்புத்திறன், திறமை, கல்வி ஆர்வம், விழிப்புணர்வு மேம்பட
காலம் : 16.04.2014 – 20.04.2014 வரை.
முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1.30 வரை.

ART OF THE LIVING HAPPINESS PROGRAM
(18 வயதுக்கு மேல்)
அறிமுக உரை : 15.04.2014 மாலை 5.00 மணி
பயிற்சி : 16.04.2014 முதல் 20.04.2014 வரை
மாலை 5.30 – 8.00 மணி வரை

அனைத்து பயிற்சிகளுக்கான இடம்
"மகேஸ்வரன் மணி மண்டபம் நல்லூர்"

மேலும் விவரங்களுக்கு
வாழும் கலை அமைப்பு - 077 100 0750
(46786)(7.6.3)

**50ஆம் ஆண்டு திருமணநாள் வாழ்த்துக்கள்**

திரு.திருமதி ஏகாம்பரநாதன்
கிருஷ்ணகுமாரி
15.04.2014





50ஆவது திருமண நாளினை
மாசின்றிப் பூர்த்தி செய்த
உங்கள் உயர்ந்த மனங்களை
வாழ்த்திட வார்த்தையில்லை
நம் வாய் மொழியும் போதவில்லை
என்றாலும் எம் இதயம்
நிறைந்து வாழ்த்துகின்றோம்
ஆண்டுகள் பல கோடி நீங்கள்
ஆயுட் சுகத்தோடும் மன மகிழ்வோடும்
வாழ்ந்திட வேண்டுமென....

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்.
பிராமணோடை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
T.P : 077 987 4415

# அடிப்படை வசதிகளின்றி அல்லற்படும் மக்கள்

மன்னார்,ஏப்.15

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேட்டையான் முறிப்பு கிராம மக்கள் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக போருக்குப் பின்னர் மீள் குடியேறிய இந்தக் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

வீட்டு வசதி, குடி தண்ணீர், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசிய வசதிகளின்றி பெரும் நெருக்கடிகளை இவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.




குடி தண்ணீரை சுமந்து வரும் முதியவர்

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக இந்த மக்கள் குடிதண்ணீருக்கு அலையை வேண்டி ஏற்பட்டுள்ளது. வேட்டையான் முறிப்பில் குடி தண்ணீர் வசதி இல்லாததால் அருகில் உள்ள கிராமத்தின் குளத்தை அண்டிய கிணறு ஒன்றை நம்பியே இவர்கள் வாழ வேண்டியுள்ளது.

தமது நெருக்கடிகள் குறித்து பல்வேறு தரப்பினருக்கு எடுத்துக் கூறியும், இதுவரை எந்த நன்மையும் கிட்டவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தற்போது தொண்டு நிறுவனம் இந்த கிராமத்துக்கு தண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இதன் ஊடாக சீராக குடி தண்ணீர் விநியோகிக்கப்படுவதில்லையென மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே தமது நிலையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வேட்டையான் முறிப்பு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



குளங்கள் வற்றி வறண்ட நிலையில்.

## குளங்கள் வற்றியதால் நன்னீர் மீன்பிடி பாதிப்பு

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக குளங்கள் வற்றி வறண்டு வருகின்றன. இதனால் நன்னீர் மீன் பிடித்தொழிலும் முற்றாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான குளங்கள் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் அதே வேளை நன்னீர் மீன்பிடி மையங்களாகவும் பயன்படுகின்றன. இதன் மூலம் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது பெரும்பாலான குளங்கள் தண்ணீரின்றி வற்றி வறண்டு போயுள்ளன. மீன் வளம் அழிவடைகின்றன. இதனால் எதிர்காலத்தில நன்னீர் மீன்பிடி முற்றாகப் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. (ஜ-18)

## குடிதண்ணீரின்றி மக்கள் நெருக்கடி

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபைக்குட்பட்ட மணியங்குளம் 50 வீட்டுத்திட்ட கிராமத்துக்கு இதுவரை குடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லையென மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மணியங்குளம் 50 வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் சுமார் 56 வரையான குடும்பங்கள் குடிதண்ணீருக்கு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இங்குள்ள மக்கள் தமக்கான குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோ மீற்றர்தூரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இப்பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ள போதும் கரைச்சி பிரதேச சபையினர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஜ-55)


## அரச சார்பற்ற அமைப்பு கிளிநொச்சியில் உதயம்

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி மாவட்ட சமூக, பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு புதிய அரச சார்பற்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைவராக கிளிநொச்சி அரசசெயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரனும், உபதலைவராக மருத்துவர்மா.ஜெயராசாவும், செயலாளராக எஸ். சௌந்தரராஜனும், உப செயலாளராக திருமதி மீனலோஜினி இதயசிவதாஸும், பொருளாளராக கோபி முகுந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக சு.பி.அமல்ராஜ், எஸ்.தீபன், எஸ்.சந்திரன், எஸ்.சிறிதரன், எஸ்.இராஜேந்திரன், எஸ்.நகுலேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஜ-18)



மழலைகளின் கிறுக்கல் ஆக்கத் திறன் கண்காட்சி பார்வையிடும் விருந்தினர்.

## மழலைகளின் கிறுக்கல் ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.15

மழலைகளின் கிறுக்கல் ஆக்கத் திறன் கண்காட்சி கடந்த 8 ஆம் திகதி உடையார்கட்டு அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஹி.அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.செஞ்சோதிகாந்தன், உதவிப் பணிப்பாளர்கள் தெ.தேவதாஸ், சி.பீதாம்பரம், சு.சிவாகரன், ஆசிரிய ஆலோசகர்கள் யோ.குகேஸ்வரன், பா.குணபாலன், கி.நவநீதன், பாடசாலைக்கு காணி அன்பளிப்புச் செய்தவரான சிவா மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பெருந்திரளானவர்கள் கலந்து சிறப்பித்தனர். (ஜ-86)

## கிணறுகளைத் திருத்த கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.15

பூநகரி ஜெயபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த குழாய்க் கிணறுகள் பல பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் அவற்றைப் புனரமைத்துத் தருமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜெயபுரம் பகுதியில் 5 வரையான குழாய்க் கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

எனவே இந்தக் கிணறுகளை புனரமைப்பதன் மூலம் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடியைத் தவிர்க்க முடியுமென தெரி விக்கப்படுகிறது. (ஜ-18)

## கல்வாரியில் சிறப்பு வழிபாடு

வவுனியா, ஏப்.15

வவுனியா பெரிய கோமரசன் குளம் பகுதியில் அமைந்துள்ள கல்வாரி ஆலயத்தில் 6 ஆம் வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

தவக்காலத்தின் 6 ஆம், வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி, நற்கருணை எழுந்தேற்றம், திருமணி ஆராதனை என்பன இடம்பெற்று பிற்பகல் 3 மணிக்கு சிலுவைப்பாதை சிறப்புத் திருப்பலியும் இடம் பெற்றது. (ஜ-421)

## ஆளுநர் விருது கலைத்திறன் போட்டிகள்

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாண ஆளுநர் விருதுக்கான கலைத்திறன் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இதில் அழிந்து போகும் பாரம்பரியக் கலைகளை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

இதன் முதலாவது போட்டி கிளிநொச்சி, வவுனியா ஆகிய இரு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடத்தப்பட்டது.

இதில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆளுநர் விருதுக்கான கலைத்திறன் போட்டிக்கு வருகை தந்திருந்த அதிகாரிகள், பிரமுகர்கள்.

குறித்த போட்டியின் முதற்கட்ட போட்டிகள் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் மன்னாரிலும் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளதுடன் இறுதிப்போட்டி மே மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளதாகவும் இப் போட்டிகளில் முதலிடம் பெறும் கலை வடிவத்துக்கு பரிசாக ஒரு லட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக இருபத்து ஐயாயிரம் ரூபாவும் ஏனைய ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (ஜ-55)

## ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் திண்டாட்டம்

கிளிநொச்சி, ஏப்.15

வன்னிப் பகுதி பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாததால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இரண்டு வருட ஒப்பந்தத்தில் வருகை தந்த ஆசிரியர்கள் மற்றும் வருடாந்த இடமாற்ற மூலம் வெளியேறிய ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, துணுக்காய், மடு, மன்னார் போன்ற கல்வி வலயங்களில் இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், வருடாந்த இடமாற்றத்திலும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களே இதுவரை நிரப்பப்படாமல் உள்ளன.

இதனால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ளவுள்ள மாணவர்களுக்கான முக்கிய பாடங்களை கற்பிப்பதற்கு கூட ஆசிரியர்கள் சில பாடசாலைகளில் இல்லையென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே 2 ஆம் தவணை ஆரம்பிக்கும் போதாவது, ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-422)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களுக்கும் ஒரு கனவு இருக்கிறது

எல்லோருக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தர வேண்டிய ஜயவருடம், யாழ்ப்பாணம் கலட்டிப் பிள்ளையாரின் சித்திரத் தேர் கவிழ்ந்து வீழ்ந்த சோகத்துடன் ஆரம்பமாகி இருக்கிறது. இது தமிழருக்குப் பெரும் அப சகுனம் என்று சொல்வோரும் இருக்கவே செய்கிறார்கள்.

தேரைச் செய்து பராமரிக்கும் மனிதர்களின் தவறுகளுக்கு கடவுளர்கள் என்ன செய்ய முடியும்? எனவே "நாள் என்செய்யும் கோள் என்செய்யும் கொடுங் கூற்று என்செய்யும்..." என்று அதனை ஒரு புறத்தில் தூக்கிப் போட்டுவிட்டு நல்லதையே நினைத்துக் கொண்டு இந்த ஆண்டை ஆரம்பிக்க வேண்டியதே தமிழர்கள் ஒவ்வொருவரினதும் கடமை.

இந்தப் புத்தாண்டு அரசியல் ரீதியில் வலுவான செய்தியுடன் பிறந்திருக்கிறது. இந்தியாவின் அடுத்த பிரதமராக வரப்போகிறார் என்று எதிர்பார்க்கப்படும் நரேந்திர மோடி, நேற்றுமுன்தினம் சென்னையில் தேர்தல் பரப்புரையில் பேசும்போது கோடிகாட்டியிருக்கும் விடயம் முக்கியமானது; காத்திரமானது.

இலங்கை, மலேசியா, பிஜி தீவுகள் உள்ளிட்ட நாடுகள் பலவற்றில் பரந்து வாழும் தமிழர்களின் நலனின் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான புதிய அரசு சிரத்தை எடுக்கும்; அந்த விடயத்துக்கு முன்னுரிமை அளித்து பாரதிய ஜனதாக் கட்சி செயற்படும் என்று உறுதியளிக்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார் மோடி.

இந்தியாவின் தற்போதைய ஆளும் கட்சியும் மஹிந்த ராஜபக்ஷ அரசு நடத்திய கொடும் போரில் முற்று முழுதாகத் துணை நின்றதுமான – காங் கிரஸ் கட்சி இந் தத் தேர்தலில் தோல்வியடைந்து பார திய ஜனதாக் கட்சியே வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், மோடியின் கூற்று கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியது.

அதேநேரத்தில் அவர் கூறியிருக்கும் மற்றொரு விடயமும் தமிழர்கள் பக்கத்தில் மிகக் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியது.

"இலங்கைப் படைகளிடமிருந்து தமிழக மீனவர்களையும் பாகிஸ்தானிடம் இருந்து குஜராத் மீனவர்களையும் பாதுகாப்பதற்குத் தற்போதைய காங்கிரஸ் அரசு தவறிவிட்டது, எமது ஆட்சியில் இந்த விடயத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

மோடியின் இந்தக் கூற்றின் அர்த்தம் என்ன என்பது தெளிவாக இல்லாதபோதும், அது ஈழத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சவாலுக்கு உட்படுத்துவதாக இருக்கக்கூடாது. இலங்கைப் படையினரிடம் இருந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவது என்ற பெயரில் வடக்குக் கடல் பரப்புக்குள் நுழைந்து வளங்களை எல்லாம் தமிழக மீனவர்கள் அள்ளிச் செல்வதை நியாயப்படுத்தும் விதத்தில் மோடியின் அரசு நடந்து கொள்ளக்கூடாது.

இது இரு அரசுகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி என்பதையும் தாண்டி இரு பகுதி மீனவர்களதும் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதேசமயம் மோடியின் முதல் கூற்று தமிழர்களுக்கு நம்பிக்கை தருகிறது. விடுதலைப் புலிகள் என்ற ஆயுதபலம் அற்ற அரசியல் களத்தில் தனித்து நிற்கும் தமிழர்களுக்கு நேச சக்தி ஒன்று அயலிலேயே உருவாகப்போகிறது என்ற நம்பிக்கை அது.

**இறுதிப்போரில் இலங்கை அரசுடன் சேர்ந்து காங்கிரஸ் அரசு கொன்றொழித்த ஆயிரம் ஆயிரம் தமிழர்களின் உயிர்களுக்கான நியாயங்களை கேட்பதற்கான வாய்ப்பையாவது மோடியின் அரசு திறந்துவிடக் கூடும் என்ற நம்பிக்கை அது.**

**மார்ட்டின் லூதர் கிங், "எனக்கொரு கனவு இருக்கிறது" என்று சொன்னது போலவே, தமிழர்களுக்கும் ஒரு கனவு இருக்கிறது நீண்ட நாள்களாக.**

**அது, ஈழத் திருநாட்டிலே அவர்கள் இழந்த அதிகாரங்களைத் திரும்பப் பெறுவது என்ற கனவு, தமிழ் மக்களும் இந்த நாட்டிலே சக மனிதர்களாகவும் சமமான மனிதர்களாகவும் வாழும் சந்தர்ப்பம் உருவாகும் என்ற கனவு, தாய் வழி தந்தை வழி என்று தொப்புள்கொடி உறவு கொண்டாடும் இந்தியா தமிழர்களின் பால் பாசத்தோடும் நேசத்தோடும் பரிவோடும் நடந்துகொள்ளும் என்கிற கனவு, இந்த உலகிலே தமிழர்களுக்கும் ஒரு நாடு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளும் கனவு.**

இந்தக் கனவுகள் எல்லாம் விரைவில் உண்மையாகி விடக்கூடும் என்கிற நம்பிக்கையை உருவாக்குவதாக மோடியின் கருத்து இருப்பதுடன் மோடியுடன் சேர்ந்து நிற்கும் தமிழகத் தலைவர்களும் இருக்கிறார்கள்.

மோடி அந்த நம்பிக்கையைச் சிதைத்துவிடக் கூடாது. மோடியின் பேச்சு வெறும் தேர்தல் பரப்புரைப் பேச்சு என்று முடிந்துவிடக்கூடாது. தமிழர் களின் கனவுகளை கனவுகளாகவே அவர் நீடித்து நிலைக்கச் செய்து விடக் கூடாது. மோடி சொல்லில் மட்டுமல்ல செயலிலும் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

# ராணுவத்தளம் நிறுவுவதே அமெரிக்காவின் இலக்கு

## தமிழர்களுக்கு உரிமை என்பது பம்மாத்து

## நேர்காணல் ஒன்றில் தாமரா குணநாயகம்

புதினப் பலகைக்காக
யதீந்திரா

ஐ. நாவுக்கான இலங்கையின் முன்னைநாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான தாமரா மணிமேகலை குணநாயகம், அமெரிக்கா இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளின் மீது உண்மையான ஆர்வம் எதனையும்கொண்டிருக்கவில்லை, மாறாக, தங்களது மூலோபாய நோக்கங்களை அடைவதற்கான ஒரு கருவியாகவே மனித உரிமை விவகாரத்தை பயன்படுத்தி வருவதாகக் குறிப் பிட்டிருந்தார்.

அமெரிக்காவின் இறுதி இலக்கு மனித உரிமைகளோ அல்லது தமிழ் மக்களுக்கான உரிமைகளோ இல்லை. மாறாக, அவர்களது உண்மையான இலக்கு, இந்தப் பகுதியில் தாம் காலூன்றுவதேயாகும் என்று குறிப்பிட்டிருக்கும் தாமரா மேலும், ஆப்கானிஸ்தானிலிருந்து விரைவில் வெளியேறவிருக்கும் அமெரிக்காவுக்கு பிராந்திய ரீதியான இராணுவ தளங்களின் தேவைப்பாடு உள்ளது. இது தொடர்பான அமெரிக்காவின் கோரிக்கையை மாலைதீவு நிராகரித்துவிட்டது. இந்த நிலையிலேயே அமெரிக்கா அதற்கான சாத்தியப்பாடுகளை இலங்கையில் ஆராய்கின்றது எனவும் குறிப்பிடுகின்றார். இது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவினால் முன்னெடுக்கப்படும், சீனாவை ஒரு வரையறைக்குள் முடக்குவதுடன், இந்திய மற்றும் சீனாவுக் கிடையிலான மேலாதிக்க கூட்டுக்களை தடுக்கும் நோக்கிலான ஆசிய மையக் கொள்கையின் இலக்காகும் என்றும் தாமரா குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையை ஒரு தோல்வியடைந்த நாடாகக் காட்டுவதன் ஊடாக, தங்களுக்கான சலுகைகளை அதிகரித்துக் கொள்ள முடியுமென்பதே அமெரிக்காவின் திட்டம் என்றும் தாமரா தனது நேர்காணலில் தெரிவித்திருக்கின்றார்.

தாமரா குணநாயகம் தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் செல்வாக்கை, அனைத்துலக அரங்கில் தூக்கி நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவரும் ஒருவர். அந்த வகையில் அவரது கருத்துக்கள் தமிழ்ச் சூழலில் ஊன்றி கவனிக்கப்பட வாய்ப்பில்லை. ஆனால் ஆசியாவின் பக்கம் உலகம் தன் கண்களைத் திருப்பியிருக்கின்ற சூழலில், அமெரிக்காவின் ஆர்வங்கள் அதிகரித்து வரு கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

**கடந்த சில வருடங்களாக உலகளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் புவிசார் அரசியல் விவாதங்களில், இந்திய மாக்கடல் பிராந்தியம் தொடர்பான கரிசனை முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆசியாவில் எழுச்சியடைந்து வரும் சீனா தொடர்பான வாதப்பிரதிவாதங்களே, மேற்படி விவாதங்களில் காணப்படும் பொதுத் தன்மையாகும்.**

இந்திய மாக்கடல் பிராந்தியம் என்பது, பிரதான கடற் பாதைகளான மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, கிழக்கு ஆசியா ஆகியவற்றை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் இணைக்கும் பகுதியாகும். இது பொருளாதார அரசியல் மற்றும் மூலோபாய ரீதியாக உலகின் முக்கியமான கடல் பகுதி. இரண்டு பில்லியன் மக்களை தொடர்புபடுத்தும் வகையில், 36 நாடுகளின் எல்லையை இணைக்கும் ஒரு கடல் மார்க்கமாக, இந்தப் பிராந்தியம் விளங்குகின்றது. மேலும் 11 கரையோர நாடுகள் பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஆர்வங்களின் அடிப்படையில், இந்தப் பிராந்தியத்துடன் இறுக்கமான தொடர்பைக் கொண்டிருக்கின்றன. பெருந்தொகையான இயற்கை வளங்கள், பெறுமதியான தாதுப் பொருள்கள், ஆடை உற்பத்தி மற்றும்கடல் உணவு ஆகியவற்றுக்கு இந்தப் பிராந்தியம்சொந்தமானது.

அந்த வகையில் உலகின் 80 வீதமான தங்கம், 52 வீதமான தகரம், 28 வீதமான மாங்கனீசு 25 வீதமான நிக்கெல், 18 வீதமான பக்சைட், 12 வீதமான சினிக் மேலும்77வீதமான இயற்கையான இறப்பர் உற்பத்தி ஆகியன இந்தப் பிராந்தியத்தில் இருந்து கிடைப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

பல அணுஆயுத பலமுள்ள அரசுகள் மற்றும் அணு ஆயுத ஆற்றலைப் பெறவேண்டுமென்னும் இலக்குடைய நாடுகளைக் கொண்டுள்ள இப் பிராந்தியமானது, உலகின் 40 வீதமான எண்ணெய் உற்பத்தி பரிமாறப்படும் பாதையாகவும் இருக்கின்றது. அதே வேளை உலகின் 50 வீதமான எண்ணெய் மற்றும் எரிவாயு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடமாகவும் இருக் கிறது. ஜப்பானின் 80 வீதமான எண்ணெய் விநியோகமும், சீனாவின் 60 வீதமான எண்ணெய் விநியோகமும் மேற்படி, இந்திய மாக்கடல் வழியாகவே இடம்பெறுகின்றது. மேலும், தோல்வி அடைந்த நாடுகள், பயங்கர வாதம் மற்றும் அடிப்படைவாதம் ஆகியவற்றுக்கான இல்லமாகவும், இப் பிராந்தியமே நோக்கப்படுகிறது.

எனவே இத்தகையதொரு பிராந்தியத்தில், இரண்டாம் உலக யுத்தத்தின் போது முக்கிய தொடர்பாடல் மையமாக பயன்படுத்தப்பட்ட இலங்கையின் மீது, உலக வல்லரசுகள் ஆர்வம் கொண்டிருக்கும் என்னும் வாதம் நிராகரிக்கக் கூடிய ஒன்றல்ல. அந்த வகையில், தாமரா குணநாயகம் குறிப்பிடுவது போல் அமெரிக்கா இராணுவ விரிவாக்கத்துக்கான சாத்தியப்பாடுகளை ஆராய்கின்றதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால், அதற்கான சாத்தியப்பாட்டை முற்றிலுமாக நிராகரிக்க முடியாது.

இலங்கையின் புவிசார் அரசியல் முக்கியத்துவத்தை நோக்கும்போது, இவ்வாறான கருத்துக்களை எழுந்தமானமாகப் புறம்தள்ள முடியாது. இலங்கை அதன் புவியமைவைவிட அர்த்தத்தில், இந்திய மாக் கடல் பிராந்தியத்தின் கிழக்கு மற்றும் மேற்கு ஆகியவற்றுக்கு இடையிலான கடல்சார் நகர்வுகளில் முக்கிய பங்குவகிக்கக் கூடிய ஒரு நாடாகும்.

வரலாற்று ரீதியாக நோக்கினாலும் 17ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர், **ஆங்கிலேயர் என பல அதிகார விரிவாக்கல் போட்டியாளர் களின் பால் ஈர்க்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்க - சோவியத் பனிப்போர் காலத்திலும் இலங்கை இராணுவ பயன்பாட்டின் பொருளில் கூடுதல் முக்கியத்துவத்தை பெற்றிருந்தது.**

**இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் தமது கடற்படை மேலாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கான போட்டியில் சோவியத்தும், அமெரிக்காவும் போட்டியிட்டுக் கொண்டிருந்த காலத்தில், இலங்கையில் தங்களுக்கென கடற்படைத் தளங்களை உருவாக்கும் முயற்சியில் இரு தரப்பினரும் ஈடுபட்டிருக்கின்றனர்.**

எனினும் இந்திய அழுத்தம், அத்துடன் இலங்கையின் அணிசாரா கொள்கை ஆகியவற்றின் மூலம் அம் முயற்சி தடுக்கப்பட்டதாகவே கருதப்படுகிறது.

அன்றைய சூழலில் இந்தியாவைக் கோபப்படுத்திய சில காரணிகளில் திருகோணமலை துறைமுகமும் ஒன்றாகும். திருகோணமலை துறைமுகத்தில் அமைந்துள்ள, இலங்கையின் கடற்படைத்தளத்தை, அமெரிக்க கடற்படையின் பாவனைக்கு வழங்கும் நடவடிக்கைகளை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசு மேற்கொண்டிருந்தமையானது இந்தியாவைக் கோபப் படுத்தியது.

திருகோணமலை இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது மிக முக்கிய பங்கு வகித்த ஒரு துறைமுகமாகும். ஜப்பானுக்கு எதிரான கூட்டுப்படையினர் சிங்கப்பூர் தளத்தை இழந்த பின்னர், திருகோணமலைத் துறைமுகமே, போரில் பிரதான பங்கு வகித்திருந்தது. இந்தப் பின்னனியிலேயே, 1942 ஆம் ஆண்டு ஜப்பான் திருகோணமலை கடற்படைத் தளத்தின் மீது தற்கொலை விமானத் தாக்குதலை மேற்கொண்டது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையில் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலும் அத்துடன் வரையறுக்கப்பட்ட ளவில் இராணுவ ரீதியாகவும் சிறந்த உறவே நிலவி வந்திருக்கிறது. சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையின் அபிவிருத்திக்கு அமெரிக்கா பல்வேறு உதவிகளை வழங்கி வந்திருக்கிறது. இலங்கையின் வெளிநாட்டு வியாபாரத்தில் அண்ண் ளவாக 40 வீதமான சந்தை வாய்ப்பை அமெரிக்கா வழங்கி வருகிறது. சுனாமி இடரின் போது 135 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியை வழங்கியிருந்தது.

முன்னர் அமெரிக்காவின் குரல் என்று அழைக்கப்பட்ட வானொலி பரிவர்த்தனை நிலையத்தை, அமெரிக்காவின் அனைத்துலக பரிவர்த்தனைக்கான நிலையம் என்று பெயர்மாற்றி மீளமைத்துள்ளது. மேலும் அமெரிக்க படையினர், இராணுவ நிலைத் தொடர்புகள் என்னும் வகையில் மட்டுப்பட்ட தொடர்புகளை இலங்கை இராணுவத்துடன் பேணிவருகின்றனர்.

அமெரிக்காவின் ஆர்வங்களுக்கு மட்டுமல்ல அவ்வாறானதொரு தளம் இந்தியா மற்றும் இலங்கைக்கும் நன்மையான ஒன்றாகவும் அமையும் என்றே பலரும் வாதிடுகின்றனர். கடற்பாதுகாப்பு அணுவாயுதப் பெருக்கத்தைக் கண்காணிப்பது, சீனாவின் செல்வாக்கைக் குறைப்பது, தீவிரவாத முறியடிப்பு மற்றும் கடற்கொள்ளையைக் கட்டுப்படுத்துவது ஆகிய அனைத்தையும் ஒருங்கே மேற்கொள்வதற்கு ஏற்ற வகையான ஒரு கடற்படைத்தளத்தைநிறுவுவதற்கு இலங்கை ஒரு சிறந்த இடம் என்பதில் மேற்படி இரு தரப்பினரும் உடன்படுகின்றனர்.

அமெரிக்கா இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபடுகின்றதா இல்லையா என்பதற்கு அப்பால், ஏன் இவ்வகையானதொரு விடயம் விவாதிக்கப்படுகின்றது? இதனை தமிழர் தரப்பு எவ்வாறு நோக்கப் போகின்றது? இந்த கேள்விகளின் அடிப்படையில் சிந்திப்பது முக்கியமானது.

**அமெரிக்காவின் டியாகோகார்சியா தளத்துக்கான ஒப்பந்தம் நிறைவு பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து அதனை ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுக்கு இடமாற்றுவதற்கான வாய்ப்புக்கள் அவதானிக்கப் படுகின்றன. இத்தகையதொரு சூழலில் தான் அண்மைக்காலமாக மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள இலங்கைக் குள், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் தொடர்பில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.**

ஆனால் அமெரிக்காவின் மூலோபாய பங்காளியான ஆஸ்திரேலியாவோ, இலங்கை தொடர்பில் மென்போக்கொன்றை வலியுறுத்தி வருகின்றது. அமெரிக்கப் பிரேரணை தொடர்பிலும் பெரியளவில் ஆஸ்திரேலியா நாட்டம் கொள்ளவில்லை. இந்த நகர்வுகள் அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஏதாவது தென்படுகிறதா? மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டால் எல்லா அறிவும் தங்களுக்குள் சித்தித்து விடுவதாக நம்பும் தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் இதனைக் கண்டுபிடித்து உதவினால், அது ஆய்வாளர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

# இலங்கைத் தகவல் தொழில்நுட்பக் கல்வியகம் நடத்திய தொழில்நுட்பம், மேலாண்மை மாநாடு




இலங்கையின் உயர்கல்வி நிலையங்களுள் முதலிடத்தில் உள்ள இலங்கைத் தகவல் தொழில்நுட்ப கல்வியகமானது. அண்மையில் மாலபே கம்பஸ் வளாகத்தில் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை (NCTM) தொடர்பான 3 ஆவது தேசிய மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தது. தேசிய அபிவிருத்திக்கான தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை முன்னேற்றங்கள் எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இந் நிகழ்வில், சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மேலாண்மை மற்றும் தொடர்புடைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மேலாண்மை துறையில் சமீபத்திய விவகாரங்கள் மற்றும் வளர்ச்சி தொடர்பில் நடைபெற்ற நிகழ்வில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பி.ஐ.எம் பணிப்பாளர் பேராசிரியர் மங்கள பொன்சேகா சமூக அறிவியல் ஆராய்ச்சி தொடர் பான மாற்று அணுகுமுறைகள் மற்றும் செயல்முறை எனும் தலைப்பின் கீழ் முக்கிய உரை நிகழ்த்தினார். மேலும் லண்டன் ஸெஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தின் பொருள்கள் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தின் உதவி முதல்வர் பேராசிரியர் டெரன்ஸ் பெரேரோ பொருட்கள் மற்றும் விநியோக மேலாண்மை தொடர்பாக உரையாற்றினார்.

என்.சி.ரி.எம். நிகழ்வினை ஏற்பாடு செய்த டாக்டர்.சமந்த தெலிஞ்சாகொட மற்றும் அவரது குழுவினரை பாராட்டிய பட்டதாரி கல்வி மற்றும் ஆராய்ச்சி பிரிவின் முதல்வர் டாக்டர்.கொலிய புளசிங்க, இந்த வருட தொனிப்பொருளின் கீழ், தேசிய பிரச்சினைகள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை குறிக்கும் ஆராய்ச்சி ஆவணங்கள் மீது அதிக ஆர்வத்தை காட்டினோம். இத்தகைய மாநாடானது, இத்துறை குறித்து ஆராய்வுகளை மேற்கொள்வதில் ஆர்வமுள்ளோருக்கு ஒரு மைல்கல்லாக அமையும் என தெரிவித்தார்.

(த)

# நேச்சுரல்ஸ் விற்பனை தூதுவராக கரீனா கபூர்




ஆசியாவில் வேகமாக வளர்ந்துவரும் சிகையலங்கார மற்றும் அழகுக்கலை நிலையங்களின் வலையமைப்பான நேச் சுரல்ஸ் தனது புதிய விற்பனை தூதுவராக பாலிவூட் நடிகை கரீனா கபூரை நிய மித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த நேச்சுரல்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனரான சி.கே. குமாரவேல், தமது வரலாற்றில் மற்றொரு மைல்கல்லை கடக்க தொடங்கும் இச்சந்தர்ப்பத்தில் 2014 ஆம் ஆண்டிறுதியில் நேச்சுரல்ஸ் அழகுக் கலை நிலையங்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்கி 650 நிலையங்களாக்குவதும், இந்தியாவின் புதிய பிரதேசங்களில் நுழைந்து விரிவான விரைவாக்க திட்டங்களை மேற்கொள்வதோடு இலங்கை போன்ற வளர்ந்துவரும் வெளி நாட்டு சந்தைகளிலும் தமது வியாபார நடவடிக்கையை விரிவாக்குவதே தமது திட்டமாகும்.

மற்றவைகளுக்கு முன்பாக எமது நாட்டின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவருடன் எமது கூட்டமைப்பை இவ்வாறு அறிவிக்கின்றோம். பாலிவூட்டில் அனைவரும் அறிந்த முகங்களில் ஒருவரே கரீனா. மற்றவர்களால் பின்பற்ற முடியாத தனித்தன்மையுடன் உலகம் முழுவதும் தனக்கென ஒரு தனியிடத்தை தக்கவைத்துள்ளார்.

கரீனா போன்ற ஒரு நட்சத்திரம் எம்மோடு கூட்டமைப்பு வைத்துக்கொண்டதில் நாம் பெருமிதம் கொள்வதோடு அவர் நேச்சுரல்ஸ்க்கு மிகவும் பொருத்தமான ஒருவராகவும் இருக்கின்றார்.

செயல்முறைகளில் மற்றும் சிறந்த வரவேற்பைப் பெற்று இந்தியாவில் முன்னிலையில் திகழும் அழகுக்கலை வலையமைப்பாக நேச்சுரல்ஸ் விளங்குகின்றது.

உள்ளக இந்தியாவில் 350 ற்கும் அதிகமான கிளை வலையமைப்பை, இவ்வருடத்தின் இறுதிக்குள் 650 கிளைகளாக விரிவுபடுத்தி இந்தியாவில் மட்டுமின்றி ஆசியாவின் மிகச்சிறந்த அழகுக்கலை வர்த்தக சின்னம் என்ற இலக்கை அடைவதே எமது ஒரே நோக்கமாகும். அத்தோடு இலங்கை வாடிக்கையாளர்களுக்கு மட்டுமின்றி எமது பங்காளர்களுக்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

விசேடமாக நேச்சுரல்ஸ் விற்பனை நாமத்தை முனனோக்கிக் கொண்டு செல்வதன் எமது திட்டத்துக்கு கரீனாவின் முக்கியமான பங்களிப்பும் எமக்குக் கிடைக்கும் என்பதே எமது நம்பிக்கையாகும், எனத்தெரிவித்தார்.

(த)

# யுனிலீவர் வழங்கும் புலமைப்பரிசில்

தமது வியாபார பங்காளர்களை கௌரவிக்கும் நோக்கில் யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் 'முதுபலச' திட்டத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் செயற்திட்டமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முன்னெடுக்கப்பட்டது.

யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம், தமது சில்லறை மற்றும் மொத்த வியாபார பங்காளர்களுக்காக 'முதுபலச' திட்டத்தை கடந்த 2003ஆம் ஆண்டு ஆரம்பித்ததுடன், இருபாலாருக்குமிடையேயான உறவினை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதன் ஓர் அங்கமாக, 'முதுபலச' அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமை ரப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முன்னெடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 6 மாணவ, மாணவியருக்கு தலா 1 இலட்சம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டம் குறித்து யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வாடிக்கையாளர் அபிவிருத்தி வியாபார பிரிவின் தலைவர் நிரோஷன் ஜயசூரிய கருத்து தெரிவிக்கையில், சமுதாயத்திற்கு சிறந்தவற்றை வழங்குவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். எதிர்கால தலைவர்களான பிள்ளைகளுக்கு சிறந்த சூழலை அமைத்துக் கொடுப்பது எமது கடமையாகும். அக் கடமையைப் பூர்த்தி செய்து அவர்களின் வெற்றிக்கு இடையூறாக விளங்கும் தடைக்கற்களை குறைக்கும் செயற்பாடே இந்த புலமைப்பரிசில் வழங்குவதன் குறிக்கோளாகும்' எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே 'முதுபலச' திட்டம் குறித்து கருத்து தெரிவித்த 'முது பலச' திட்டத்தின் திட்ட முகாமையாளர் ஷாலிக அலஹகோன், 'எம்மோடு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வியாபாரிகளுடனான தொடர்பினை மேலும் வலுப்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும். இதனூடாக அதிக நன்மைகளை பெற்றுக் கொள்ள எம்மால் முடியும். 2011 ஆம் ஆண்டு எமது பங்காளர்களுக்கு அளிக்கப்படும் அனுகூலங்களை மேலும் அதிகரிக்கும் வகையில் அவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்தோம். இதன் மூலம் முதுபலச அங்கத்தவர் களுக்கு சக்தியாக விளங்குவதே எமது எதிர்பார்ப்பாகும்' என தெரி வித்தார்.

இத் திட்டத்தின் கீழ் இம்முறை காலி எல்பிட்டிய, எம்பிலிபிட்டிய, வெஹேர கம்பிட்டிய, அக்குறண மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களுள் அதிகூடிய திறனை வெளிப்படுத்திய காலி எல்பிட்டியவைச் சேர்ந்த திவ்யாஞ்சலி சிதாரா மாணவியின் தாயார் பி.ஏ.ஜி.எம். லக்ஷானி தனது மகளுக்கு கிடைத்த புலமைப்பரிசில் குறித்து கருத்து தெரிவிக்கையில், இத்தகைய புலமைப்பரிசில்கள் பிள்ளைகளை மேலும் ஊக்கப்படுத்துகிறது. பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு இத்தொகை மாபெரும் சக்தியாக விளங்கும். முதுபலச திட்டமானது எமது வியாபாரத்திற்கு மாத்திரமன்றி, எமது குடும்ப அங்கத்தவர்களின் நலனிலும் பங்களிப்பை செலுத்தி மிகப்பெரிய சக்தியை எமக்களிக்கிறது' ஈ்ன்றார்.




(த)

# மொபிடெல் அறிமுகமாக்கிய நொக்கியா 107 மற்றும் 108




நொக்கியா 107 மற்றும் 108 சொப்ட் லொஜிக் உடன் இணைந்து வியத்தகு இணைப்புகள் விநியோகத்தை மொபிடெல் அறிமுகம் செய்துள்ளது அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட நொக்கியா 107 மற்றும் 108 இற்காக பிரத்தியேகமாக வ்டிவமைக்கப்பட்ட இணைப்பை வழங்கும் வகையில், தேசிய கையடக்கத் தொலைபேசி வழங்குநரான ஸ்ரீலங்கா டெலி கொம் மொபிடெல் ஆனது த நொக்கியா கோர்ப்பரேன் உடன் கைகோர்த்துள்ளது.

இந்த ஆண்டில் நொக்கியா அறிமுகம் செய்திருந்த விலை குறைந்த கையடக்கத் தொலைபேசிகளின் வரிசையில் முன்னிலை வகிக்கும் கையடக்கத் தொலைபேசி மாதிரிகளாக அமைந்துள்ளன.

மொபிடெல் மற்றும் சொப்ட்லொஜிக்; காட்சியறைகளில் கொள்வனவு செய்யும் நொக்கியா 107 மற்றும் 108 மாதிரி கையடக்கத் தொலைபேசிகளுடன் ரூ.250/- போனஸ் உடன் இணைந்த விசேட மொபிடெல் முற்கொடுப்பனவு இணைப்புடன் விற்பனை செய்யப்படுவதுடன், இலவசமாக முற்கொடுப்பனவு சிம் அட்டையும் வழங்கப்படுகிறது. இந்த இணைப்பு குறுந்தகவல் மற்றும் குரல் மூல அழைப்பு வசதிகளுக்காக செலவிடப்படும் ஒவ்வொரு ரூ.50/- இற்கும் விசேட ரூ.5/- போனஸை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. நொக்கியா 107 இன் விலை 3790 ரூபாவாக அமைந்துள்ளதுடன், நொக்கியா 108 இன் விலை 4490 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொபிடெல் முற்கொடுப்பனவு இணைப்புகளுக்கு வெகுமதிகளுக்கு மேலதிகமாக, இந்த கையடக்க தொலைபேசிகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு, மாற்றீடு செய்து கொடுக்கப்படும் உத்தரவாதம், கையடக்கத் தொலைபேசிக்கு ஒரு வருட காலத்துக்கான உத்தரவாதம், உதிரிப்பாகங்களுக்கு ஆறு மாத கால உத்தரவாதமும் வழங்கப்படுகிறது. வர்ண ஒளித்திரை, பாவிக்காத நிலையில் ஒரு மாத காலம் வரை நிலைத்திருக்கக்கூடிய பற்றரி ஆயுள் காலம், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தட்டச்சு செய்யக்கூடிய கீபாட் வசதிகள் போன்றனவும், இரட்டைச் சிம் மற்றும் ஹான்ட்ஸ் ஃப்ரீ வசதிகளையும் கொண்டு இந்த இரு வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அமைந்துள்ளன. இரு தொலைபேசிகளும் வர்ணத் திரையை கொண்டுள்ளதுடன், இரட்டைச் சிம் பயன்படுத்தக் கூடிய வசதியையும் கொண்டுள்ளது. இரு வகையான நொக்கியா 107 மற்றும் 108 போன்றவற்றை அனைத்து மொபிடெல், சொப்ட்லொஜிக் விற்பனை நிலையங்களில் இருந்தும் நாடு முழுவதும் காணப்படும் விநியோகஸ்தர்களிடமிருந்தும் கொள்வனவு செய்து கொள்ளலாம். (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எதற்கும் கலக்கமோ, அதிர்ச்சியோ அடையாத சூழ் நிலைகள் அமையும். எல்லா வகையிலும் நல்ல பயன்கள் உண்டாகும். எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.



**இடபம்**: தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.



**மிதுனம்**: கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமாக முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.



**கடகம்**: கடன் பிரச்சினை குறையும். வாழ்க்கையில் முன்னேறத் தேவையான உதவிகள் கிடைக்கும். எதிலும் மிகவும் கவனமாகச் செயற்படுவது நல்லது. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். நீங்கள் அடுத்தவருக்கு வலியச் சென்று உதவி செய்வீர்கள்.



**சிங்கம்**: உங்களுக்கு வருமானம் அதிகரிக்கும். வசதிகள் பெருகும், சுக சௌக்கியத்தை தரும். உறவினர்களுடன் சுமுக நிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.



**கன்னி**: எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். மற்றவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும்.



**துலாம்**: கௌரவம், அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலகப் பணியைச் சிறப்பாகச் செய்வார்கள்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



**தனுசு**: வெளித் தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும். குடும்பத்தில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக்கொள்வது நல்லது. திட்டமிட்டுச் செயலாற்றுவது முனனேற்றத்துக்கு உதவும்.



**மகரம்**: சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாகத் தீர்ப்பீர்கள். சொந்தம், நட்பு வகையில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. சில நேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம் கவனம் தேவை. தொழில், வியாபார விடயங்களில் பயன் கிடைக்கும்.



**கும்பம்**: வேலைப்பளு, வீண்அலைச்சல் உண்டாகும். மனதில் இருந்த இறுக்கம் நீங்கும். உங்கள் வார்த்தைக்கு மற்றவர்களிடம் மதிப்பு இருக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்கள் ஆலோசனை கேட்டு மற்றவர்கள் உங்களை நாடி வருவார்கள்.



**மீனம்**: திறமையான செயல்களால் புகழும் அந்தஸ்தும் உயரும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும் மாத இறுதியில் ஆன்மிகப் பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் செல்லும்.

## நாளை

**சித்திரை-03 புதன்கிழமை | 16.04.2014**

திதி: பிரதமை பி.ப.01.25 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.இ.11.44 வரை

சுபநேரம்: 04.34-06.04 வரை
இராகுகாலம்:.12.04-01.34 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### தாயின் தெய்வத் தன்மை

தாய்மைத் தத்துவத்தை வழிபட வேண்டும் என்று இந்து அறிவுறுத்தப்படுகிறான் என்கிறார் விவேகானந்தர். தாயின் பதவி மனைவியின் பதவியை விட உயர்ந்தது. தாய் தெய்வீகமானவள். கடவுளின் தாய்மையே தந்தை நிலையைவிட அவரது கருத்தில் குடிகொண்டிருக்கிறது

எந்தக் குலப் பெண்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுவதில்லை. கொலை புரிந்த பெண்ணின் தலையைக் கூட வெட்ட மாட்டார்கள். அவளைக் கழுதை மீது அதன் வாலை நோக்கி இருக்கச் செய்து தெருக்களில் சவாரி செய்வார்கள்.

பறையடிப்பவன் அவளுடைய குற்றத்தைச் சொல்லிக் கத்துவான். பிறகு அவளை விட்டுவிடுவார்கள். இந்த அவமானமே அவள் மறுமுறை குற்றம் செய் யாமல் தடை செய்யப் போதிய தண்டனையாகும். அவள் இரக்கம் கொண்டால் மத நிறுவனங்கள் அவளுக்குத் திறந்திருக்கும். அங்கே தூயவளாய், விரும்பினால் துறவறம் பூண்டு தெய்வீகத் தன்மையைப் பெறலாம்.

'கண்காணிப்பதற்குத் தலைவனில்லாமல் துறவிகளுடன் சேர்ந்து சுதந்திரமாக இருப்பதால் பாசாங்குக்கு இடம் ஏற்படாதா?' என்று விவேகானந்தரிடம் கேட்டனர். ஏனெனில், இந்து அறிஞர்களில் மிகத் தூயவர்களின் குழு அத்தகையதே என அவர் கூறினார். கேள்வியை அவர் ஒப்புக்கொண்டு, மக்களுக்கும், துறவிக்குமிடையே ஒருவரும் தலையிடமாட்டார்களென விடை அளித்தார். ஜாதிக் கட்டுப்பாடு அற்றவர்கள் துறவிகள். கீழ்ச்சாதி இந்துவைப் பிராமணன் தொடமாட்டான்; ஆனால், அவனோ அவளோ துறவறம் பூண்டால், அவர்கள் முன் எவ்வளவு பெரியவனும் விழுந்து வணங்க வேண்டும்.

## ஹெப்பாடிடிஸ்-சி வகை காமாலை நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

ஹெப்பாடிடிஸ்-சி வகை காமாலை நோய்க்கு 12 வாரத்துக்குள் நிவாரணம் கொடுக்கும் மருந்து ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் புதிய மருந்தை எடுத்துக்கொண்டவர்களில் 90 சதவிகிதம் பேருக்கு நோய் குணமாகியுள்ளது.

காமாலைக்கான சிகிச்சையில் இது ஒரு முக்கியமான திருப்புமுனை என்று கருதப்படுகிறது.

தற்போதுள்ள சிகிச்சை முறைகளில், அரைவாசி நேரத்தில் காமாலையில் இருந்து குணமடையமுடிகிறது. காமாலையால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் அல்லது உடல் நீரின் மூலம் மற்றவர்களுக்கு காமாலை பரவுகிறது.

பச்சை குத்தும் ஊசி, போதை மருந்து ஊசி போன்றவற்றின் மூலமும் இது பரவுகிறது. காமாலை மனிதனின் கல்லீரலைப் பாதிக்கிறது.

ஸ்பெயின், ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் இருந்த 380 நோயாளிகள் மீது இந்தப் புதிய மருந்தை டெக்ஸாஸ் சுகாதார அறிவியல் மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனை செய்துள்ளனர். அதன் பின்னர் நோயாளிகளை இரு பிரிவுகளாக பிரித்து 12 வாரங்களுக்கும், 24 வாரங்களுக்கும் என்று கண்காணித்துள்ளனர்.

காமாலை முற்றிய நிலையில் இருந்த நோயாளிகள் இவர்கள். ஆனால் மருந்து உட்கொள்ளத் தொடங்கி 12 வாரங்களுக்குப் பின்னர் சோதித்தபோது 208 பேரில் 191 பேருக்கு காமாலை முற்றாக குணமாகியிருந்தது. அதே போன்று 24 வாரங்களுக்கு பின்னர் சோதித்த போது 172 நோயாளிகளில் 165 பேருக்கு காமாலை முற்றாக குணமாகி இருந்தது.

இந்த ஆராய்ச்சியின் பிரதான ஆராய்ச்சியாளரான டாக்டர் ஃபிரட் புவர்டாட், இது மிகவும் அற்புதமான விடயம் என்றும், நோயாளிகளுக்கு எதிர்காலம் இருக்கின்றது என்பதை இது உறுதிப்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

இந்த புதிய மருந்து காமாலையை உற்பத்தி செய்யும் புரதத்தை குறிவைத்து செயற்படுகிறது. அது உருவாகாமலும், மறு உற்பத்தி செய்யாமலும் இருக்கும் வகையில் மருந்து வேலை செய்கிறது.

இந்த மருந்து உட்கொள்வதால் அசதி, தலைவலி, வாந்தி போன்ற பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது இருக்கும் மருத்துவ முறையில், ஓர் ஆண்டுக்கு ஊசி போடப்படுகிறது. மேலும் இந்த மருந்தால், மன அழுத்தம், அலுப்பு, சுகமின்மை போன்ற எண்ணம் ஆகியவை ஏற்படுகிறது.

அத்தோடு காமாலை முற்றியவர்களுக்கு இப்போது இருக்கும் மருத்துவ முறை பாதுகாப்பானதாகவும் இல்லை. மேலும் விஷத்தன்மை அதிகம் இருப்பதால் தற்போது இருக்கும் மருத்துவ முறை அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மருந்து ஜினோடைப் 1 என்று கூறப்படும் முதல் வகை காமாலைக்கான மருந்தாகும். பிரிட்டனில் காமாலையால் பாதிக்கப்படுபவர்களில் இந்த வகை காமாலை தான் 45 சதவீதமானவர்களுக்கு ஏற்படுகிறது.

அடுத்து இருக்கின்ற ஜினோடைப் 2 மற்றும் ஜினோடைப் 3 ஆகிய காமாலைகளுக்கு விரைவில் மருந்து கண்டுபிடிக்கப் பட்டு விடும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 2 | | | 8 | | 4 | 9 |
| | 3 | | | | | 5 | | 7 |
| 4 | | 6 | 1 | | | | | 8 |
| | 2 | | | | 5 | 7 | | |
| 3 | 1 | 4 | | | | 9 | 5 | 2 |
| | | 7 | 2 | | | | 3 | |
| 1 | | | | | 9 | 2 | | 3 |
| 2 | | 3 | | | | | 9 | |
| 6 | 7 | | 5 | | | 4 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 7 | 6 | 4 | 8 | 1 | 9 |
| 9 | 1 | 7 | 5 | 8 | 2 | 4 | 3 | 6 |
| 8 | 4 | 6 | 9 | 3 | 1 | 5 | 7 | 2 |
| 6 | 3 | 9 | 1 | 5 | 8 | 7 | 2 | 4 |
| 1 | 8 | 2 | 4 | 7 | 6 | 9 | 5 | 3 |
| 4 | 7 | 5 | 3 | 2 | 9 | 6 | 8 | 1 |
| 3 | 9 | 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 5 |
| 7 | 6 | 1 | 2 | 9 | 5 | 3 | 4 | 8 |
| 2 | 5 | 8 | 6 | 4 | 3 | 1 | 9 | 7 |

# ஆஸி.செல்வதற்கு முயன்ற 4145 இலங்கையர் கைது

## 88 ட்றோலர் படகுகளும் சிக்கின என்கிறார் கடற்படை பேச்சாளர்

கொழும்பு,ஏப்.15

2009 ஆம் ஆண்டு முதல் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக் குச் செல்ல கடல் வழியை பயன்படுத்திய 4145 இலங்கையர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லப் பயன்படுத்திய 88 ட்றோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்தும் இந்தோனேசியாவில் இருந்தும் சென்ற இலங்கையர்களின் புள்ளி விவரம் இன்னும் கணக்கிடப்படவில்லை என்று அவர் கூறினார். அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த இலங்கை கடற்படையினரின் கப்பல்களுக்கு மேலதிகமாக ஆஸ்திரேலியா வழங்கும் இரு கப்பல்கள் இன்னமும் 2 மாதங்களில் இலங்கை வந்து சேரவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

**இலங்கை கடல் பரப்பில் பாது காப்பில் ஈடுபடும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன்தான் தரகர்கள் செயற்படுகின்றனர்.**

இலங்கை கடல் பரப்பில் பாது காப்பில் ஈடுபடும் கடற் படையினரின் ஒத்துழைப்புடன்தான் தரகர்கள் செயற்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் எந்த ஒரு உயர் அதிகாரியும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



தமிழ்-சிங்கள புத்தாண்டையொட்டி பிரதமர் தி.மு ஜயரட்ண தனது குடும்பத்துடன் தங்காலையிலுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கால்டன் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று கலாசார முறைப்படி ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

# துப்பாக்கி வெடித்ததில் இருவர் காயம்

கொழும்பு,ஏப்.15

வில்பத்து தேசிய சரணாலயத்தின் எல்லைப் பகுதியிலுள்ள இடமொன்றில் துப்பாக்கி வெடித்ததில் இருவர் காயமடைந்துள்ளனர்.

முணமல், கெஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு, மற்றொருவர் தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச)

# சர்வதேச விசாரணைகள் ஜூன் மாதம் நடைபெறும்

## ஆங்கில வார இதழ் தகவல்

கொழும்பு,ஏப்.15

இலங்கையில் நடைபெற்ற போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நாவில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐ.நா. உயர்அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

**"விசாரணை முயற்சிகளை இலங்கை அரசு நிராகரித்திருப்பதுடன், அதற்கு அயல் நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும், இலங்கைக்கு ஆதரவை வழங்கி வருகின்றன.**

இந்த விசாரணையை மேற்கொள்வதற்குத் தேவையான பொறிமுறை பற்றிய தெளிவற்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலை மே மாத இறுதியிலேயே முடிவுக்கு வரும். அதன்பின்னரே முழு அளவிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நாவின் இந்த விசாரணை முயற்சிகளை இலங்கை அரசு நிராகரித்திருப்பதுடன், அதற்கு அயல்நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும், இலங்கைக்கு ஆதரவைவழங்கிவருகின்றன.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைகளுக்கு இலங்கை அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# வாகன விபத்துகளில் 23 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.15

நாட்டில் கடந்த மூன்று நாள்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரையே இவ்வாறு உயிரிழப்புகள் 23 பதிவாகியுள்ளன.

19 வாகன விபத்துச் சம்பவங்களில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

10 ஆம் திகதி காலை ஆறு மணி முதல் 13 ஆம் திகதி காலை ஆறு மணி வரையில் மொத் தமாக 270 வாகன விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் வாகனங்களை பாதுகாப்பான விதத்தில் செலுத்த வேண்டும் என்று பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச)

# 3 நாள்களில் 586 சாரதிகள் மாட்டினர்



கோப்புப்படம்

கொழும்பு,ஏப்.15

மதுபோதையில் வாகனங்களை செலுத்துகின்ற சாரதிகளை கைது செய்வதற்கான நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரையிலும் நிறைவடைந்த 3 நாள்களில் 586 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் கடந்த 10 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


# மரண அறிவித்தல்

## திருமதி கனகாம்பிகை தியாகராஜா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கனகாம்பிகை தியாகராஜா 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ஞானமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தியாகராஜாவின் அன்பு மனைவியும், ஞானாம்பிகை (கனடா), பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), காலஞ்சென்ற மீனாம்பிகை மற்றும் பாலச் சந்திரன் (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா), அமிர்தாம்பிகை (கோண்டாவில்) வனிதாம்பிகை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இன்பராஜ் (அமெரிக்கா), கவிதா ஆகியோரின் பாசமிகு தாயும், புவனேஸ்வரனின் அன்பு மாமியும், தட்சாயினி, மெகாசினி, ரக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு. (46802)(2,3,6)

(021 567 1015 - கோண்டாவில்)
(0014162848290 - கனடா)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோணிமுத்து இராஜேஸ்வரி (ராசு)



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோணிமுத்து இராஜேஸ்வரி நேற்று முன்தினம் (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோணிமுத்துவின் பாசமிகு மனைவியும், நீற்றம்மா (இந்தியா), காலஞ்சென்றவர்களான மரியநாயகி, பொனிப்பாஸ் மற்றும் மேரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றெஜினாராணி, றோசாலினி, ஜிம்மி ஹென்றிக்ஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரனிஸ்லாஸ், மனோகரன், ஜெமினா ஆகியோரின் அன்பு மாமியும், டொறின்- குயின்ரஸ் (ஜேர்மனி), சசிகரன்-சூரி (லண்டன்), வினோத்- பிரபாஜினி, நிஷாமினி, றெனோஜா, பிறேமினி, றொபினற், கஸ்தூரி-நிரோசன், சுதர்சன், கிறிஸ்ரீனா, அஜிதா, றெனோஜன், அனுஸ்ரிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றிஷ்மிகா, மைக்கல்லெபின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் நல்லடக்கத்திற்காக புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 077 489 6737 (46803)

தகவல் : குடும்பத்தினர்.

## கிறிஸ்ரி முருகையா

*(முன்னாள் ஆசிரியர் - ஸ்கந்தவரோதய கல்லூரி, விளையாட்டு அதிகாரி - வலிகாமம் வடக்கு, பிரித்தானிய ராணுவ அதிகாரி, சிங்கப்பூர்)*

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் " பிலிப்பியர் 1:21



யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரி முருகையா (12-04-2014) சனிக்கிழமை கனடா மொன்றியலில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அப்பச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மண்டலநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஈவா செல்வராணி(முன்னாள் ஆசிரியை -ஸ்கந்தவரோதய கல்லூரி, யூனியன் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், ஜயந்தினி, அஸ்றீன் சாந்தினி, ஷெறீன், கிறிஸ்ரன் காமினி, எவ்லீன் ஷாமினி, குளோறியா, லெஸ்லி சஞ்சீவன், வெஸ்லி அருணா ஆகியோரின் அன்புத் தந்தையும், எட்கார் செல்லையா, ஜெயலொலிபவன்(சோதி), காலேப் குலநாதன்(போதகர்- தமிழ் சீயோன் தேவாலயம்), ரவீந்திரராஜன் ரவி, ராஜரட்ணம் ராஜன், பிறேமினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி இரவு 9.30 மணிக்குக் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Saduril lodge, Manipay. (46804)(2,3,6)

தகவல்: குடும்பத்தினர்.

# புலிகளின் ஊடகப் போரில் இலங்கை அரசு தோல்வி

## ரொஹான் குணரட்ண தெரிவிப்பு




கொழும்பு,ஏப்.15

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் போரில் இலங்கை அரசு தோல்வியைத் தழுவியுள்ளது என்று பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான நிபுணத்துவப் பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளைப் போர்க் களத்தில் அரசு தோற்கடித்த போதிலும், ஊடக களமுனையில் அது தோல்வியடைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு என்பதிலிருந்து பரப்புரைப் போராட்ட இயக்கமாக பரிணமித்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

போலியான தகவல்களின் அடிப்படையில் புலிகள் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பரப்புரைப் போராட்டத்தை புரிந்து கொண்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை இராஜதந்திரிகள் கூடுதல் முனைப்பு காட்டுவதில்லை.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுடன் அரசு காத்திரமான தொடர்புகளைப் பேண வேண்டும். தமிழ் ஊடகங்களுடன் அரசு இணைந்து செயற்பட வேண்டும். இனவாதிகள் அல்லாத இளம் அரசியல் தலைவர்களை இலங்கை உருவாக்க வேண்டும்.

அதிகளவான தமிழ், முஸ்லிம்களை பாது காப்புப் படையில் அரசு இணைத்துக்கொள்ள வேண்டும்.

போலியான செய்திகளை முறியடித்து உண்மையான தகவல்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அரச நிறுவனங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

மேற்குலக நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் அரசு மாற்றம் செய்யக்கூடாது. தொடர்ந்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுவாக இருத்தல் வேண்டும்.

பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தளர்த்தினால் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையிலும் மீளப் போர் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படும்-என்றார். (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தலூசியா பொனிபஸ் (தவமணி)

(ஓய்வுபெற்ற ஆசிரியை-புனித லோறன்ஸ் வித்தியாலயம், வெள்ளவத்தை)



போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தலூசியா பொனிபஸ் 12.04.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜீவம் பொனிபஸின் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை ஓவசியர்-மன்னார்) பாசமிகு மனைவியும், மேகலா, பயஸ், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான அருளப்பு-ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் பொனிபஸ் தம்பதியரின் அன்பு மருமகளும், அஞ்சலோ, மேரி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியம், பிலோமினா மற்றும் திருச்செல்வம், நவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சவிரிமுத்து மற்றும் அலெக்சாண்டர், றஞ்சினி, காலஞ்சென்றவர்களான கீதபொன்கலன், ஜோய் மற்றும் கிங் பொனிபஸ் காலஞ்சென்ற பெனா மற்றும் றொபின், ராணி, றஞ்சன் ஆகியோரின் மைத்துனியும் பானு, அருண், அவந்திகா, காவியா, வேணுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

விலாசம் :
MR.JEEVAM BONIFACE
Unit 1105-25 Trail Wood DR
Mississauga Ontario L4Z 3K9
Canada (011 289 232 1416)

தகவல் : பெறாமகன்
Dr. லக்ஸ்மன் பொனிபஸ்
021 222 4325
793, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(46785) (7.6.3)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சிறீகாந்தன் நிமலன்



அன்னை மடியில் 02.03.1997

ஆண்டவன் அடியில் 15.04.2011

நிமலா!
நீ எம்மைவிட்டுச் சென்று
ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டன - ஆனால்
உன் நினைவுகளோ எம் இதயத்தில்
இன்னும் அழியாது உள்ளது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உன்
நினைவுகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும்

உன் அன்பான
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அத்தான்.

(46769)(5.6.3)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### துரையப்பா நடராஜா

(நடராஜா கார் கராஜ் உரிமையாளர்- ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்)



பிறப்பு 20.09.1933

இறப்பு 25.04.2013

எம்மை அன்போடு அரவணைத்து இவ்வையகத்தினில்
வாழ்வாங்கு வாழவைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் சிரித்தமுகம் எங்கள் மனதைவிட்டு
மறையப் போவதில்லை என்றென்றும்
வணங்குகிறோம் உங்கள் ஆத்மசாந்திக்காய்...

25, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(46768) (7.6.3)

# தென் கிழக்குப் பல்கலைக்கு 20 இல் செல்கிறார் மஹிந்த

அம்பாறை,ஏப்.15

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் எஸ்.எம்.எம். இஸ்மாயீல் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்து மாணவர்களுக்குகற்றலுக்கு ஏற்ற பொருத்தமான சுழலை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் சுமார் 360 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.



*மஹிந்த ராஜபக்ஷ*

இந்த நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## நெஞ்சக் கதைகள் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### எமக்கும் ஆரெவரோ!

கோயில் ஒன்றின் வாசல்படிகளுக்குக் கீழாகச் செல்லும் வடிகாலைத் தெருநாய் ஒன்று தனது பிரசவத்துக்காகத் தேர்ந்திருந்தது. குட்டிகளை எவரும் நெருங்காதிருக்க உறுமி எச்சரிக்கை செய்து காவல் இருக்கும். கூப்பிடு தூரத்திலிருந்த உணவகத்தின் பின்பக்கமாக நுழைந்து மிச்சமீதிக் கழிவுகளை விழுங்கிவிட்டு மீண்டும் குட்டிகளிடம் வந்து பாலூட்டுவதற்காகப் படுத்துக் கொள்ளும். இன்னும் ஓரிரு வாரங்களில் கடுவன் குட்டிகள் யாராலும் கையகப்படுத்தப்பட, மீதமிருப்பவை தாய்க்குப் பின்னால் ஓடித்திரியும் உணவுக்காக. குறிப்பிட்ட காலம் போக, தான் உணவெடுக்கும் போது கிட்டப் போனாலே கடித்துத் துரத்தும் தாய் நாய். கோழியும் குஞ்சுகளை சிறகினுள் பொத்தி வைத்திருக்கும். குஞ்சுகள் வளர்ந்துவிட்டால் தான் இரையெடுக்கும் போது கிட்டப் போனாலே கொத்தி விரட்டும் தாய்க் கோழி. நாங்கள் - மனிதர்கள் மட்டுமே பிள்ளை, பேரன், பூட்டன் எனக் கிளைவிடுகிறோம்.

பிரிட்டிஷ் பிரதமர் தனது பிள்ளையை தோளில் சுமப்பது போல், சீனத் தந்தை ஒருவர் பிள்ளையை 18 மைல் தூரத்திலுள்ள பாடசாலைக்குத் தோளில் சுமப்பது போல் அன்றைய எம்மவர்களும் கோயில் குளமென்றும், பாட சாலை, மருத்துவமனை என்றும் தமது பிள்ளைகளைத் தோளில் சுமந்தவர்கள் தான். இவர்களில் ஒரு சாரார் அந்தச் சுமைகளின் நினைவுகளை இறக்கி வைக்க முடியாது வலி சுமந்த மேனியர்களாக வயோதிபர் சாலைகளைத் தஞ்சமடைய, மறுசாரார் தனிமையில் வெதும்பி அழுந்துகின்றனர்.

மேலை நாடுகளில் அன்னையர்க்கு, தந்தையர்க்கு என ஆண்டுக்கு ஒரு தினத்தை வைத்திருக்கின்றனர். இத்தினங்களில் முதியோர் பராமரிப்பு நிலையங்களுக்குச் செல்லும் பிள்ளைகள் அங்கிருக்கும் தமது பெற்றோருக்குத் தின்பண்டங்கள், பரிசுப் பொருள்கள் வழங்கி மகிழ்வார்களாம். இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளின் பின்னர் இங்கும் இப்படியான பண்பாட்டுச் சிதைவு ஏற்படுமோ என எண்ணுவோரும் உளர். "ஆராரோ ஆரிரரோ" பாடி எமை ஆளாக்கிவிட்டவர்கள் "எமக்கு ஆராரோ ஆரெவரோ" என வாடும் நிலையைத் தவிர்க்கும் வகையில் எமது இளைய சமூகத்தினரது பார்வை முதியோர் மீது பதிய ஆரம்பித்தால் அது போற்றுதலுக்குரியதே.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னாச்சி சண்முகநாதன்



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சி சண்முகநாதன் 12.04.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமு மற்றும் லீலாவதியின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சசிகாந்தன், சத்தியசீலன் (கனடா), சத்தியமோகன் (லண்டன்), காலஞ்சென்ற சசிதரன் மற்றும் சசீந்திரன் (லண்டன்), சத்தியரூபன் (பிரான்ஸ்), சசீலா, சசிகரன் (பிரான்ஸ்), சசீலன் (கனடா), சசிரேகா, சசிரதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சின்னத்தங்கத்தின் அன்புச் சகோதரியும், மலர்விழி, வரதினி, பத்மாவதி, துவாரகாதேவி, சுனித்தா, கௌதமி, ரவிச்சந்திரன், தர்சினி, சிந்துஜா, திலீபன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சபிதன், சஜிந்தா, சஜிந்தன், துஷானா, திலக்ஷா, பிரவீன், கோபிதன், கோகுலன், நிருஷனா, ஆகாஷ், அபிஷன், சஜித், லக்சிகா, திலக்சன், சயந்தன், ஹர்சனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2014) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 0452

(43613)(12)(3.6)


# புதுவருடத்தன்று ஆலயங்களில் நடைபெற்ற விசேட பூசைகளில்





புத்தாண்டு தினத்தையொட்டி நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்று விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். .(வ-7-135)







புத்தாண்டு தினத்தையொட்டி மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் விசேட பூசை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். (வ)



புத்தாண்டு தினமாகிய நேற்று நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நடைபெற்றது. இதன்போது பிள்ளையார் தேரேறி பக்தர்கள் புடைசூழ வலம் வருகிறார். (ஒ-135-7)



யாழ்.அத்தியடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்று புதுவருட பிறப்பன்று நடைபெற்றபோது விநாயகர் தேரில் ஆரோகணித்து வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். (ஒ-7-135)

யாழ்ப்பாணம், ஏப்.15

ஜெய வருட புத்தாண்டு தினத்தையொட்டி நேற்று திங்கட்கிழமை பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசைகளும் தேர்த்திருவிழா உற்சவங்களும் சிறப்பாக இடம்பெற்றன.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மக்கள் காலை 6 மணி முதல் தொடர்ச்சியாக இடம்பெற்ற புத்தாண்டுக்கான விசேட பூசைகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நகரின் அத்தியடி சிதம்பர நடராஜ விநாயகர் ஆலயம் நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் ரதபவனிகள் காலை 9.15 மணிக்கு ஆரம்பமானது இரண்டு ஆலயங்களிலும் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் அருளை வேண்டினர். தீவகப் பகுதியிலுள்ள ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (வ-7)




## யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம் பெருமையுடன் வழங்கும் சிறப்பு யோகாவாழ்வுப் பயிற்சி

அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் யாழ்.மண்ணில் கடந்த பல ஆண்டுகளாக ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவச் செல்வங்கள் முதல் பல அன்பர்கள் பயின்று பயனடைந்துள்ளதைக் காண லாம். இதன் எதிரொலியாக வாழ்க வளமுடன் என வாழ்த்தும் உள்ளங்கள் பல இன்றும் நிறைவோடு வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் மேலதிக பயிற்சியாகிய உயர்நிலைத் தியானம், இறைநிலை விளக்கம் போன்ற தற்சோதனைப் பயிற்சிகளையும், கருத்துரைகளையும், வழங்கவென தமிழ் நாட்டிலிருந்து **மனவளக்கலைப் பேராசிரியர்கள், மூத்த பேராசிரியர்கள்** எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இவர்களுள் மூத்த பேராசிரியர் A.S.**ராதாகிருஷ்ணன்** அவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலும் புனித ஸ்தலங்கள், நதிக்கரைகள், ரிஷிகேசம் போன்ற இடங்களில் இச்சிறப்பு யோகா பயிற்சியினை தலைமைதாங்கி இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கின் றார்கள். தற்போது யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம் இலங்கையில் முதன்முதலாக தீவக மண்ணில் புங்குடுதீவு சர்வோதய சேவை வளாகத்தில் சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை ஆலயச் சூழலில் அமைந்துள்ள புனித ஸ்தலத்தில் இச்சிறப்பு யோகா பயிற்சியினைவழங்க இருப்பது ஓர் சிறப்பம்சமாகும்.

**ஆதலால் ஆர்வமுள்ள பலரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**இடம் : புஸ்பா மணி மண்டபம், சர்வோதய சேவை வளாகம், புங்குடுதீவு.**
**காலம் : 18,19,20, 04.2014**
**தலைவர் : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேள் அவர்கள்**
**கருத்துரைகளும்.தியானங்களும், அதன் விளக்கங்களும் வழங்குபவர்:**
மூத்த பேராசிரியர் அருள்நிதி A.S.இராதாகிருஷ்ணன் அவர்கள்

கருத்தரங்கில் பங்குபற்றுபவர்கள் முன்கூட்டியே பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம்**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தொடர்பு: 077 772 6732, 077 123 5646, 071 440 3268, 077 736 8745, 077 037 6432.**

அனுசரணை:
**அன்னை நாகா பூட் சிற்றி**
**175,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(C/13607)(5.2.3.6)

# மாடியிலிருந்து தவறி வீழ்ந்த சிறுமிக்கு தலையில் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.15
மாடியில் தனியாக விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தவறி கீழே வீழ்ந்ததால் தலையில் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சங்கானை மேற்கில் கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த செல்வி நவதீசன் சங்கவி என்ற நான்கு வயதுச் சிறுமியே இவ்வாறு தலையில் படுகாயமடைந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டவராவார். (வ-88)

## 2014ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச் சாலையை 01.05.2014 தொடக்கம் 30.04.2015 வரையான காலப் பகுதிக்கு வாடகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நலன்புரி சங்கத்தின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

25.04.2014ஆம் திகதி வரை வைத்தியசாலையிலுள்ள நிர்வாகக் கிளையில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பின்வரும் கொடுப்பனவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விவரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை | 1000.00 | 20000.00 |
| வாகனத் தரிப்பிடம் | 750.00 | 10000.00 |


பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2014.04.25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது 2014.04.25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக தலைவர், நலன்புரி சங்கம், பொது வைத்தியசாலை கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மூலையில் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி சமர்ப்பிப்பவர்கள் 2014ஆம் ஆண்டு சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி எனவும் வாகனத் தரிப்பிடத்திற்கு கேள்வி சமர்ப்பிப் பவர்கள் 2014ஆம் ஆண்டு வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்குவதற் கான கேள்வி எனவும் குறிப்பிட வேண்டும்.

சகல கேள்விப் பத்திரங்களும் 2014.04.25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர், நலன்புரி சங்கம்
மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.

## தெல்லிப்பழை, பன்னாலை
## கனகசபை நடராஜர்-கனகராயர் சரோஜினிதேவி தம்பதியரின்
# திருமண வாழ்வின் பொன்விழா

அன்று
1964.04.15



இன்று
2014.04.15



பன்னாலையம்பதியில் கால்பதித்த கனகசபை - காமாட்சி அம்மாள்
சிதம்பரத்தைவேண்டி சிறைவிடுத்தார் நடராஜரெனும் சிசுவொன்றை
மல்லாகத்துறைந்த முழுநிலவாம் சரோஜினிதேவியின் கரம்பிடித்த
பொன்னாளைக்கண்டார் பாரும் பொன்விழாக் காணும் தம்பதியர்!

கருவாய்ச் சுமந்தெம் காயங்கள் ஆற்றிநின்றீர்
பட்டினியில் தாமிருந்து நம்பசியதனைப் பறக்கவிட்டீர்
உருவாய் உய்த்துயர உபவாசம் கொண்டிருந்தீர்
ஊனாய் உருகியெம் உள்ளொளி பெருக்கிவிட்டீர்.
சருகாய் இருந்தெம் சங்கடங்கள் தீர்த்து வைத்தீர்
சத்தியத்தை அறிவித்து தத்துவங்கள் எமக்குரைத்தீர்

அருகாய் இருந்தெம் ஆக்கினைகள் அறுப்பித்தீர்
நால்வராய் ஆக்கியெமை நானிலத்தில் நட்டுவைத்தீர்!
பண்பறியும் செயலுடையீர் பாராட்டும் பெரும்பணியுடையீர்
பகையறுக்கும் பரிவுடையீர் தகைசேர்க்கும் அருட்குணமுடையீர்
நல்லாரை அணைத்துற்றீர் நற்பேரர்களின் பிணைப்புற்றீர்
பெருவாழ்வில் இணைந்துற்றீர் பெருமானின் துணையுற்றீர்

இல்லறத்தில் நல்லறமாய் ஈன்றமக்கள் நால்வரொடு பேரர்
இதயமுவந்து வாழ்த்துகின்றோம் இறைவனாசி வேண்டுகின்றோம்-
பொன்னாளைக் கொண்டாடும் பொன்விழாத் தம்பதியர் -என்றும்
பல்லாண்டு வாழ்க இப்பாரினில் நன்றே.

**பன்னாலை, தெல்லிப்பழை.**

**வாழ்த்துபவர்கள்:**
**மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## இளம்பெண் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இளம் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதே பகுதியைச் சேர்ந்த கொண்சலின் ஜெரோமி (வயது - 22) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனது மகளை காணவில்லை என குறித்த பெண்ணின் தந்தையார் நேற்று பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4-101)



யாழ்.நல்லூர் வடக்கு கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் தேர்த்திருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது. தேர்த்திருவிழாவில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ற-10)

## வீடு புகுந்து திருடியவன் வசமாக மாட்டினான்

யாழ்ப்பாணம், ஏப்.15
பட்டப்பகலில் வீடுபுகுந்த திருடன் பணம் உள்ளிட்ட பொருள்களைத் திருடிக்கொண்டிருக்கும் போது வீட்டு உரிமையாளர் வீட்டுக்குச் வந்ததை அடுத்து திருடன் மாட்டிக் கொண்டான். திருடனுக்கு அயலவர்கள் உரிய கவனிப்பு வழங்கிய பின்னர் அவனை மானிப்பாய் பொலிஸில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் சங்கானை வல்லை வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குறித்த வீட்டுக்காரர் அயலில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோதே திருடன் வீடு புகுந்து திருடியுள்ளான். பல ஆயிரக்கணக்கான பணம் திருடப்பட்டதாகக் கூறப்பட்ட போதும் ஆயிரத்து 750 ரூபா பணம், கைத்தொலைபேசி மற்றும் இரண்டு கைக்கடிகாரம் என்பனவே திருடப்பட்டன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

குறித்த பொருள்களைத் திருடிக் கொண்டிருக்கும்போதே குறித்த வீட்டுக்காரர் தமது வீட்டுக்குத் திரும்பிவிட்டனர். அதனால் வீட்டினுள்ளே திருடிக் கொண்டிருந்த திருடன் அவர்களிடம் மாட்டினான்.

அயலவர்களின் உதவியுடன் திருடனுக்கு உரிய கவனிப்பு வழங்கிய பின்னர் அவனை மானிப்பாய் பொலிஸில் ஒப்படைத்தனர். சுழிபுரம் பகுதியில் உள்ள பனிப்புலம் எனும் இடத்தைச் சேர்ந்தவனே திருட்டுப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டான். குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற-4- 29)

## கூட்டமைப்புக்கு எதிராக கிழக்கில் துண்டுப் பிரசுரம்

மட்டக்களப்பு, ஏப்.15
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொய்யான வாக்குறுதிகள் எனும் தலைப்பில் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டிப்பட்டிருந்தன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தத் துண்டுப் பிரசுரங்களில், "வடக்கு கிழக்கு மாகாண மக்களின் காணிகள் தொடர்பாக குரல் எழுப்பும், ஒரே ஒரு அமைப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என மக்களிடம் பொய் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இவர்களுள் எஸ்.யோகேஸ்வரன், பி.அரியநேத்திரன், மற்றும் பொன்.செல்வராசா ஆகியோர் இன்று கிழக்கு மக்கள் மத்தியில் பொய் காரர்களாக விளங்கியுள்ளார்கள்.

ஐயங்கேணி பகுதியிலுள்ள நரசிம்ம வைரவர் கோவிலின் முன்னால் உள்ள காணி தொடர்பாக பிரச்சினையை பேச்சு மூலம் தீர்ப்பதற்கு மக்கள் ஒன்று திரள்வதை அறிந்த எஸ்.யோகேஸ்வரன் உட்பட அவரது நாடாளுமன்ற குழுவினர் அந்த இடத்திற்கு சமுகமளித்து வழமை போல் மீட்பாளர்களாக காட்சியளித்தார்கள்.

அன்று படம் ஒட்டிச் சென்றவர்கள், இன்றுவரை ஐயங்கேணி மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கோ, அது குறித்து தேடிப்பார்ப்பதற்கோ இதுவரை முன்வரவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின், பொய்யான வாக்குறுதிகளையும் ஏமாற்று நாடகங்களையும், நன்றாகப் புரிந்து கொண்டிருக்கும் மக்கள், அதைத் தீர்க்கும் வழியையும் கண்டு விட்டார்கள்.

அதனால்தான் ஆளும் கட்சியின் கல்குடா அமைப்பாளர் சந்திரபால ஊடாக அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் முன்வைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். ஐயங்கேணி பிரதேசத்தில் ஆளும் கட்சியின் அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு அப்பிரதேச மக் கள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் கேட்டுள்ளனர்.

இதன் மூலம் தெரியவருவது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.யோகேஸ்வரன் உள்ளிட்ட பொய் நடிகர்களை மக்கள் வெறுத்துவிட்டார்க்ள என்பது புலனாகின்றது. மக்களிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கி அப்பாவி மக்களின் பெறுமதியான வாக்குகளை சூறையாடி நாடாளுமன்றத்திற்குள் ஊடுருவியுள்ள இவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒருநாளும் முன்வரவில்லை. முன்வரவும் மாட்டார்கள். யோகேஸ்வரன் உள்ளிட்ட இவர்கள் சுய நலத்துடனும் சுகபோகத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை. "- என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ற)

## வேலைவாய்ப்பில் இலங்கை முன்னிலை

கொழும்பு, ஏப்.15
வேலை வாய்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ரீதியிலான ஆய்வொன்றில் இலங்கையில் 4.2 சத வீதமானோர் வேலையற்று உள்ளனர் என்று கண்டறியப்பட்டள்ளது.

பங்களாதேஷில் வேலையற்றோர் 5 சத வீதமாக உள்ள அதே வேளை, இந்தியாவில் 8.5 சதவீதமானவர்கள் வேலையற்ற நிலையில் உள்ளனர் என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இந்தியாவில் விசேட தொழில் சார்ந்த 30 கோடி மக்கள் அதிக அளவிலான ஊதியத்தை பெறுவதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## புதுவருட களிப்பிலும் நான்கு பேர் கொலை

கொழும்பு, ஏப்ரல், 15
நாடு முழுவதும் நேற்றுப் புதுவருட கொண்டாட்டங்களில் மக்கள் ஈடுபட்டிருந்த நிலையில் நாட்டின் சில பாகங்களில் இடம்பெற்ற மோதல்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர். பொல்பித்திகம, ஊராபொக்க, ஹிக்கடுவ மற்றும் ரிதிகம ஆகிய பகுதிகளில் இச்சம் பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பொல்பித்திகம பொரவெவ பகுதியில் ஒருவர் மற்றொருவரை கழுத்து நெரித்து கொலை செய்துள்ளார். ஊராபொக்க பெங்கமுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அதில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை ஹிக்கடுவ - மானம்பிட்ட வீதி பிரதேசத்தில் போத்தலால் தாக்கப்பட்டு 22 வயது இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அதேவேளை ரிதிகம பிரதேசத்தில் கழுத்து வெட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். காணி பிரச்சினை ஒன்றின் காரணமாக 57 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-10)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாத்தறை

38 வயதையுடைய ராஜ சுலோசனாவின் மரணத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் உள்ள சிவில் பாதுகாப்பு படைமுகாமைச் சோந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.

குறித்த மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸாரால் அழைத்து வரப்பட்ட மோப்ப நாய் குறித்த படைமுகாம் நோக்கி சென்றிருந்த நிலையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற-101)

### இலங்கை

இணக்கப்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"சிவில் போர் இடம்பெற்று ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பெரியளவிலான குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளில் முன் னேற்றம் காணப்படவில்லை.

குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் வலியுறுத்தியது. பிரதமர் டேவிட் கமரூனும் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பிரகடனத்திற்கு அமைய இலங்கை அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-5)

### வருடாந்த

தேரின்பின்இரண்டுசில்லுகளை இணைக்கும் அச்சு சரியாக பொருந்தாமையினாலே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த சம்பவத்தின் போது ஆலயக் குருக்கள் மட்டும் காயமடைந்துள்ளார்.

தேர் திருவிழாவின் போது தேர் சரிந்து விழுந்ததால் ஆலயத்துக்கு வந்த பக்தர்கள் மனம் கலக்கமடைந் திருந்ததைக் காண முடிந்தது.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை தம்பசிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் குருக்கள் சிதம்பரநாதன் மகேந்திரக்குருக்களே காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-14)

### இலங்கையின்

நிராகரித்த காரணத்தினாலேயே இலங்கைக்கான பயணத்தை இறுதி நேரத்தில் ரத்து செய்தோம் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் செரோன் ஹொட்க்சன்.

இலங்கையின் முன்னாள் கிரிக்கட் வீரர் முத்தையா முரளீதரனால் உருவாக்கப் பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சில பிரிட்டன் நாடாளுமன்ற உறுப் பினர்கள் இலங்கைக்கு பயணம் செய்ய விருந்தனர். எனி னும் அந்தப் பயணம் இறுதி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ள செரோன் ஹொட்க்சன், போர் காரண மாக பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே தமது நீண்ட கால கோரிக்கை எனவும் தெரிவித்துள்ளார். (ற-5)

### பாதுகாப்பு

வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அமைந்துள்ளன. அவற்றில் பாதுகாப்புக் கடமைகளில் தென்னிலங்கையைச் சேர்ந்த, தனியார் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக வடக்கு மாகாண சபையின் சகல திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கும் சென்ற சீருடையினர், நேரடியாகவே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களிடம் அவர் களது விவரங்களைக் கேட்டுப் பெற்றுள்ளனர். அவர் கள் தமது விவரங்களை கொடுப்பதற்கான அனுமதியை மேலிடங்களில் பெறுவதற்கும் சீருடையினர் அனுமதிக்கவில்லை.

சீருடையினரின் இந்தத் தீடீர் நடவடிக்கை தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-5)

### விபத்தில்

மகேந்திரம் என்பரே காயமடைந்தவராவார்.

படிரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தலையில் படுகாயமடைந்தநிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ற-4-10)

### தினக்குரல்

(வயது 31) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் குறித்து தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் தெரிவிக்கையில்,

கரவெட்டியில் இருந்து செய்தியாளர் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கம்பியால் தலையிலும் வயிற்றுப்பகுதியிலும் தாக்கியுள்ளனர். அத்துடன் மோட்டார் சைக்கிளையும் அடித்து நொருக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டனர்.

பின்தொடர்ந்து வந்த நபர்கள் செய்தியாளரா என விசாரித்துவிட்டே தாக்கியுள்ளனர். செய்தியாளர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் - என்றார். (ஐ-11-173-101)

### அமெரிக்க

யாழ். ரோட்டறிக்கழகத்தின் ஏற்பாட்டில் உதயன் பத்திரிகையின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெறும். இதில் அறிவியல் ஆர்வமுள்ள அனைவரையும் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்.பல்கலைக் கழகத்தில் நாளை முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இலங்கையில் சூரியகலத் தொழில் நுட்பமும் அதனோடு இணைந்த தொழில் முயற்சிகளும் என்ற தலைப்பிலான ஆய்வுப்பட்டறையிலும் பேராசிரியர். சிவலிங்கம் சிவானந்தன் தலைமையில், விஞ்ஞானிகளான றிம் கூட்ஸ், றிம் கெசற், ரமேஸ் தேரே, மௌபாஃக் அல் ஜசீம் ஆகியோர் வள வாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமெரிக்க ஆய்வுநிறுவனமான சிவானந்தன் ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து பேராதனை, களனி, ருகுண மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களில் வருடாந்தம் தொடர் ஆய்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் மூன்றாவது கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்தப்படவுள்ளது. ஆய்வுப் பட்டறையின் இறுதி நாளன்று பல்கலைக்கழக பௌதீகத்துறையினரால் சூரியக்கலத் தொழில் நுட்பம் தொடர்பான செயல் முறை விளக் கங்களும் வழங்கப்படவுள்ளன.

ஆண்டுதோறும் இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு வருடாந்தம் வளவாளர்களை அனுப்பி ஆய்வுப் பட்டறைகளை நடத்துவதோடு, சுமார் அறுபது ஆய்வு மாணவர்களைஅமெரிக்காவுக்கு அழைத்துப் பயிற்சிகளையும் வழங்கவிருக்கின்றது சிவானந்தன் ஆய்வு நிறுவனம்.

தமிழரான சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்துக்கான சாதனையாளன் விருதைக் கடந்த ஆண்டு பெற்றிருந்தார். (ற)

### மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்



தென்மராட்சி, ஏப்.15

சித்திரைப் புத்தாண்டையொட்டி சாவகச்சேரி நகர சபையினரும், சாவகச்சேரிப் பொலிஸாரும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழாவின் ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.

ஆண்களுக்கான 10 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டி சரசாலை கனகன்புளியடி சந்தியில் ஆரம்பித்து வேம்பிராய், புத்தூர் சந்தி, மீசாலை, சங்கத்தானை ஊடாகவும், பெண்களுக்கான 5 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி மீசாலை, புத்தூர் சந்தியில் ஆரம்பித்து மீசாலை, சங்கத்தானை ஊடாகவும் சாவகச்சேரி பேருந்து நிலையம் வரை இடம்பெற்றது.

இரு இடங்களிலும் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**ஆண்கள்**

எஸ்.சுவர்ணன், ஏ.காண்டீபன், எஸ்.நிரோஜன், கே.ஜெயக்குமார், ஆர்.யுதிஸ்லன்.

**பெண்கள்**

ஏ.சிவஜெகதீபா, ஏ.அபிநயா, ஏ.மேரி அனிஸ்டா, எஸ்.சர்மிளா, எஸ்.தீபரஞ்சினி.

அனைவருக்கும் பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (த-9)

# கருணாகரன், சென்.சேவியர் காலிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.15

பரபரப்பாக இடம்பெற்ற இரு ஆட்டங்களில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம், சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும், கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று மத்திய உதையைப் பெற்றுக் கொண்ட கருணாகரன் அணி ஆட்டம் தொடங்கி சில மணித்துளிகளில் வீந்தனின் துணையுடன் முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

இதனை அடுத்து மத்திய உதையை உதைத்த சென். மேரிஸ் அணியினர் முதல் கோலுக்கு பழிவாங்குவது போல உடனடியாக சுதர்சனின் உதவியுடன் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமநிலைக்குக் கொண்டு வந்தனர்.



எதிரணியை எய்த்து கோல் போடும் முயற்சியில் சென்.சேவியர் வீரர்

இதனை அடுத்து ஆட்டம் சூடு பிடிக்க இரு அணி வீரர்களும் வெற்றிக் கோலைப்போட கடுமையாகப் போராடினர்.

முன்கள வீரர்களுடைய போராட்டங்கள் எவையும் இரு அணிகளின் கோல்க் காப்பாளர்களின் முன் எடுபடவில்லை. இதனால் ஆட்டம் 1:1 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் தமது ஆட்ட வியூகங்களை மாற்றி போட்டியிட்டனர். இதனால் இடைவேளையின் பின்னான ஆட்டத்தில் பரபரப்பு நிலை காணப்பட்டது..

இரு அணியினரும் வெற்றிக் கோலைப் போட வேண்டும் என்ற உத்வேகத்துடன் விளையாடியதால் பந்து இரு பகுதியின் கோல் பகுதிக்குள் மாறி மாறிச் சென்று அலைக் கழிந்து கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைய 4 நிமிடங்கள் இருக்கும் போது கருணாகரன் அணியைச் சேர்ந்த இளவரசன் மிக அருமையான கோல் ஒன்றைப் போட்டு தமது அணியை முன்னிலைப் படுத்தினார்.

இவரின் இந்தக் கோலின் மூலம் கருணாகரன் அணியே வெற்றி பெறும் என அனைவரும் எண்ணியிருந்தனர். ஆனால் நடந்ததோ வேறு. ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும் போது சென். மேரிஸ் அணியின் கோல் காப்பாளர் தமது கோல் பகுதிக்குள் வைத்து பந்தொன்றை உயர உதைத்தார்.

இதன்போது கருணாகரன் அணியைச் சேர்ந்த வலது பகுதி தடுப்பாட்டக்காரரான தர்சன் அந்தப் பந்தை தடுத்தாடாது அசண்டையீனமாக விட்டார். அதனைச் சரியாகப் பயன்படுத்திய சுதர்சன் அதனைக் கோலாக்க முற்பட்ட போது முன்னோக்கி வந்த கோல் காப்பாளர் தனது கைகளால் ஓங்கி அறைந்தார்.

ஆனாலும் சுதர்சன் அதனை விடவில்லை. உயர்ந்து வந்த பந்தை எட்டி உதைத்தார். ஆம் இலக்குத் தவறவில்லை. பந்து கோல் கம்பங்களுக்குள் புகுந்தது. இதனால் கோபமடைந்த கருணாகரன் அணி வீரர்கள் தர்சனின் அசண்டையீனத்தை திட்டித் தீர்த்தனர்.

இரு அணிகளும் 2:2 என்ற நிலையில் இருந்த போது ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு உதைகளில் கருணாகரன் அணி வீரர்களை, தர்சிகன், இளவரசன் மற்றும் வீந்தன் ஆகியோர் கோலாக்க ஏனைய இரு வீரர்களும் பந்தை வீணாக்கினர்.

> " இரு அணியினரும் வெற்றிக் கோலைப் போட வேண்டும் என்ற உத்வேகத்துடன் விளையாடியதால் பந்து இரு பகுதியின் கோல் பகுதிக்குள் மாறி மாறிச் சென்று அலைக் கழிந்து கொண்டிருந்தது.

அதேபோல சென்.மேரிஸ் அணி வீரர்கள் எம்.மொறின், கிளிங்டன் மட்டும் பந்தை கோல் கம்பங்களுக்குள் செலுத்த ஏனையவர்கள் தவற விட்டனர். இதனால் 5:2 என்ற அடிப்படையில் கருணாகரன் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும், வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டம் தொடங்கியதில் இருந்து முடியும் வரை விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் முற்பாதியில் இரு அணியினரும் சிறப்பாகச் செயற்பட்டனர்.

இடைவேளைக்கு முன்பு சென்.சேவியர் அணி நிரோஜன், நிஷாந்தன் ஆகியோரின் துணையுடன் இரு கோல்களையும், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் பிரபுவின் துணையுடன் ஒரு கோலையும் பெற்றது.

இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இரு அணி வீரர்களும் கோலைப் போடுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் முன்கள வீரர்கள் பதற்றம் காரணமாக அவற்றைக் கோலாக்கத் தவறியதுடன் பந்தைக் கொண்டு சென்று, கோல் கம்பங்களுக்குள் அடிப்பதற்குப் பதிலாக, கம்பங்களுக்கு மேலாக மிக உயரமாக அடித்து வான வேடிக்கை காட்டினர்.

இதனால் சந்தர்ப்பங்கள் பல வீணாக 2:1 என்ற அடிப்படையில் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (த-400-422)

## காலிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஐங்கரன் மீடியா செலூசன் நிறுவனம் நடத்தும் 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் ஆட்டங்கள் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் காலிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 9.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



95ஆவது அரியாலை சுதேச திருநாட் கொண்டாட்டத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியில் பங்கு கொண்ட போட்டியாளர்கள். (த-23)

## தென்மராட்சி கரப்பந்தில் ஐங்கரன் வி.க.சம்பியன்

தென்மராட்சி, ஏப்.15

சாவகச்சேரி நகர சபையினரும், சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவையொட்டி தென்மராட்சி பிதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில், இடம்பெற்ற சுற்றுப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீ முருகன் வி.க.மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் களமிறங்கின.

போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி சம்பியனாகியது.



இறுதிப் போட்டிகளை சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பரிசோதகர் வன்னியாராச்சி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (த-9)

## கற்சிலைமடு பரந்தாமன் அணி வலைப் பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 15

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கற்சிலை மடு அ.த.க. பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் கற்சிலை மடு பரந்தாமன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கற்சிலை மடு பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கற்சிலைமடு பரந்தாமன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

## திருமலையில் உதைபந்தாட்டம்

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அரையிறுதியாட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிமா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 15

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் "உதயன்" பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வீண்மீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளன.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளன. (த-23)




# விளையாடுவாரா பீற்றர்சன்?

ஐ.பி.எல். கிரிக்கெட்டில். டெல்லி டேர்டெவில்ஸ் அணித் தலைவராக இங்கிலாந்தை சேர்ந்த கெவின் பீற்றர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் கையில் பந்து தாக்கியதில் உபாதைக்கு உள்ளாகியுள்ளார்.

கடந்த வாரம் டில்லி வந்து அணியுடன் இணைந்த அவர் அதன் பிறகு பயிற்சியின் போது துடுப்பாட்டம் செய்வதைத் தவிர்த்து வந்தார். அவர் வலது கையின் கடைசி இரு விரல்களையும் சேர்த்து பண்டேஜ் போட்டுள்ளார். காயத்தில் சிக்கி இருப்பதால் அவர் தொடக்க ஆட்டத்தில் களம் இறங்குவாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.


டெல்லி அணி தனது முதல் ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்சை நாளை மறுதினம் ஷார்ஜாவில் சந்திக்கிறது.

பீற்றர்சனின் காயம் குறித்து டெல்லி அணியின் தலைமை செயல் அதிகாரி ஹேமந்த் டுவாவிடம் கேட்ட போது; விரலில் சிறிய காயம் இருப்பதாகவும். அது பிரச்சினையாக இருக்காது என்றும் பீற்றர்சன் எங்களிடம் கூறினார். முதலாவது ஆட்டத்தில் தன்னால் ஆட இயலாது என்று அவர் கூறவில்லை - என்றார். (கு)

# நம்பிக்கையுடன் கோஹ்லி

ஐ.பி.எல். கிண்ணத்தை பெங்களூர் அணி கைப்பற்றும் என இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் வீராட் கோஹ்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார். 7வது ஐ.பி.எல். போட்டிகள் வருகிற நாளை ஐக்கிய அரபு எமிரேட்சில் தொடங்கவுள்ளது. இதற்காக வீரர்கள் சிறப்பான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் ஐ.பி.எல். கிண்ணத்தை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் கைப்பற்றும் என அந்த அணியின் அணித் தலைவர் விராட் கோஹ்லி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்; ஐ.பி.எல். 7ஆவது தொடரில் தடைகளை கடந்து வெற்றிகரமாக முன்னேறி கிண்ணத்தை கைப்பற்றுவோம் என்று உறுதியாக நம்புகிறேன். எங்கள் அணிக்கு திறமையான மேலும் சில வீரர்கள் வந்துள்ளனர். ஒருங்கிணைந்து களத்தில் அசத்த எங்கள் அணி வீரர்கள் தயாராக இருக்கிறார்கள், மொத்தத்தில் இந்த ஆண்டு பெங்களூர் றோயல் சலஞ்சர்சின் ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறேன்.




சர்வதேச கிரிக்கெட்டில் நெருக்கடிக்கு மத்தியில் தொடர்ந்து விளையாடி விட்டு இங்கு வரும் வீரர்கள் நல்ல மன நிலையில் உள்ளனர் மேலும் இங்கு சிறப்பான சூழல் நிலவுகிறது. அதை பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்போம் என்று தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு ஏற்கனவே பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி இரண்டு முறை இறுதிப்போட்டிக்கு வந்து கிண்ணத்தை தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)



# அஜ்மலுக்கு அழைப்பு

பாக்கிஸ்தான் இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கு இடையே திட்டமிடப்பட்டுள்ள இரண்டு டெஸ்ட் மற்றும் 3 சர்வதேச ஒருநாள் போட்டிகளின்போது பாகிஸ்தான் சார்பாக சஹிட் அஜ்மலை அழைப்பது குறித்து ஆராயப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கிலாந்து வோஷேஸ்ஷெயர் கவுன்டி அணியில் விளையாடிக்கொண்டிருக்கும் சுழல் பந்து வீச்சாளர் சஹீட் அஜ்மலை அழைப்பது குறித்து கலந்தாலோசிக்கப்படுவதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி சுப்ஹான் அஹமட் தெரிவித்துள்ளார்.

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இந்த தொடர் போட்டி நடப்பது குறித்த உறுதியான தீர்மானம் கடந்தவாரம் டுபாயில் இடம்பெற்ற கூட்டத்திலேயே வெளியிடப்பட்டது. வோஷேஸ்ஷெயர் கவுன்டி அணிக்காக விளையாடும் சஹிட் அஜ்மலுக்கு பதிலாக நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிச்சேல் மெக் கிளன்ஹேன் இணைத்துக்கொள்ளப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# இந்தியக் கிரிக்கெட்டின் அதிரடிக் கட்டுப்பாடுகள்

இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவில் புதிய கட்டுப்பாடுகளைப் புகுத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.

வீரர்கள் ஆட்டம் எப்படி இருக்கிறது என்பதை நேரில் கண்டு அறிவதற்காக, இந்திய கிரிக்கெட் அணி வெளிநாடு செல்லும் போது தேர்வுக் குழுவினரும் உடன் செல்வது வழக்கமாகும். இந்நிலையில் தேர்வுக் குழுவினர் வெளிநாடு செல்ல இந்தியக் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இது குறித்து கிரிக்கெட் சபைத் துணைத் தலைவர் ரவி சவாந்த் கூறுகையில்; தேர்வுக் குழுவினருக்குக் கட்டுப்பாடு விதிக்கும் வகையில் புதிய விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன்படி தேர்வுக் குழுவினர் இந்திய வீரர்களின் ஆட்டத்தைப் பார்ப்பதற்காக வெளிநாடு செல்லக்கூடாது. இந்தியாவில் நடக்கும் போட்டிகளின் போது மட்டும் வீரர்களின் ஆட்டத்தை தேர்வுக் குழுவினர் நேரில் பார்க்கலாம் என்று கூறியுள்ளார். (கு)

# இணையத்தில் புதிய சாதனை

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

20/20 உலகக்கிண்ண இறுதிப் போட்டியை ரசிகர்கள் இணையதளத்தில் அதிக அளவில் பார்த்து புது சாதனையைப் படைத்துள்ளனர்.


இணையதளத்தில் கிரிக்கெட் போட்டி ஒன்றை இவ்வளவு ரசிகர்கள் பார்த்திருப்பது இதுவே முதன்முறையாகும்.

இப்போட்டியில் இலங்கை அணி முதன்முறையாக 20/20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. சமீபத்தில் முடிவடைந்த 20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அனைத்தும் ஸ்டார்ஸ் போர்ட்ஸ் இணையத்தளத்தில் ஒளிபரப்பானது. பணம் கட்டும் வாடிக்கையாளர்கள் போட்டியை இணையத்தளத்தில் நேரடியாக பார்க்க முடிந்தது. மற்றவர்களுக்கு சுமார் 5 நிமிடம் தாமதமாகப் போட்டி ஒளிபரப்பட்டது.

20/20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்த இணையத்தளத்தில் 19.3 லட்சம் பேர் பார்த்துள்ளனர். இதற்கு முன்பு ஐ.பி.எல் போட்டியில் பெங்களூர் மற்றும் புனே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தை 14.8 லட்சம் பேர் இணையதளத்தில் பார்த்ததே சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (கு)

**இணையதளத்தில் கிரிக்கெட் போட்டி ஒன்றை இவ்வளவு ரசிகர்கள் பார்த்திருப்பது இதுவே முதன்முறையாகும்**





# காதலியுடன் ஊர் சுற்றும் கோஹ்லி

இந்திய அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான வீராட் கோஹ்லி, தனது காதலி அனுஷ்காவுடன் ஜாலியாக ஊர் சுற்றியுள்ளார்.

7அவது ஐ.பி.எல். போட்டிகள் நாளை ஐக்கிய அரபு எமிரேட்சில் தொடங்குகிறது.

போட்டி தொடங்க சில தினங்களே உள்ள நிலையில், பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ் அணியின் அணித் தலைவரான வீராட் கோஹ்லி, தனது காதலி அனுஷ்காவைச் சந்தித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் சினிமா படப்பிடிப்புக்காக அனுஷ்கா சர்மா சென்றுள்ளார். 20/20 உலக கிண்ணப் போட்டிகளில் விளையாடிவிட்டு நாடு திரும்பிய கோஹ்லி, காதலியைச் சந்திக்க சென்றுவிட்டாராம். இருவரும் ஒன்றாக சுற்றித் திரிந்து தங்களது அன்பையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக் கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று 20/20 உலக கிண்ணப் போட்டிகள் தொடங்குவதற்கு சில தினங்களுக்கு முன்பும், இருவரும் கொழும்பில் உள்ள கடற்கரையில் ஒன்றாக சுற்றி திரிந்ததாகத் தகவல்கள் வெளியானது குறிப்பிடத்தக்கது. (கு)

## சூதாட்ட விவகாரம் எமக்கு பாதிப்பில்லை


சுரேஷ் ரெய்னா

7ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் சுற்றுத்தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள அபுதாபியில் நாளை தொடங்குகிறது.
தொடக்க ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.
சென்னை சூப்பர் கிங்ஸ் நாளை மறுதினம் நடைபெறும் தனது முதலாவது லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை, அபுதாபியில் சந்திக்கிறது.
இந்த நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா கருத்து வெளியிட்டுள்ளார்.
இந்த ஆண்டுக்கான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் சில புதிய வீரர்கள் இடம் பெற்று இருக்கின்றனர். இருப்பினும் நாங்கள் சமபலம் கொண்ட கலவையான அணியாக இருக்கிறோம். பிரன்டன் மக்கலம் எங்கள் அணியில் இணைந்து இருப்பது மிகப்பெரிய பலமாகும். மிகவும் கட்டுக்கோப்பாக பந்து வீசும் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரீ இடம் பிடித்து இருப்பது எங்களது சுழற்பந்து வீச்சின் தரத்தை மேலும் அதிகரிக்கும். டோனி தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சிறப்பான நிலையில் உள்ளது.
சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் மற்றும் கேப்டன் மீதான சூதாட்ட சர்ச்சையால் அணியின் ஆட்ட திறனில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. நாங்கள் தொழில்முறை வீரர்கள் எந்தவிதமான நெருக்கடியும் எங்களது ஆட்டத்திறனை பாதிக்க அனுமதிக்கமாட்டோம். ஐ.பி.எல். போட்டியில் வெற்றிக்கான உத்வேகத்தை அதிகரிக்க முதல் 5 ஆட்டங்கள் மிகவும் முக்கியமானதாகும். அதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.
ஐ.பி.எல். போட்டியில் கடந்த 6 ஆண்டுகளாக கடவுள் எனக்கு நல்ல கருணை காட்டி வருவதுடன், சென்னை அணி நிர்வாகமும் என் மீது நம்பிக்கை வைத்து எனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அனுமதித்து வருகிறது.
ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆடுகளங்களுக்கு ஏற்ப எங்களை விரைவில் தயார்படுத்தி கொள்ள முடியும். வங்க தேசத்தில் ஆடியது போல் ஐக்கிய அரபு எமிரேட்சிலும் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வரும் ஆட்டங்களில் தான் எனது முழு கவனமும் இருக்கிறது என மேலும் ரெய்னா தெரிவித்தார். (த)


# சாதனையாளர் சிறப்புரை



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்
உதயன் குழுமத்தின் ஆதரவுடன் நடத்தும்
சாதனையாளர் சிறப்புரை நிகழ்வில்
ஈழத்தமிழ் விஞ்ஞானி
**பேராசிரியர் சிவா. சிவானந்தன்**
அவர்கள் கலந்து கருத்துரைக்கிறார்...

**காலம் : 15.04.2014, செவ்வாய்க்கிழமை, பி.ப 3.00 மணி**

**இடம் : குமாரசுவாமி மண்டபம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்**

Rotary RI DISTRICT 3220 ROTARY CLUB OF JAFFNA
உதயன்


## உள்ளூர் உதைபந்தாட்ட அணிகளின் உரிமையாளர்களாக சச்சின், கங்குலி



முன்னாள் இந்திய கிரிக்கட் அணியின் தலைவர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் சௌரவ் கங்குலி ஆகியோர் இந்திய சுப்பர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் இரண்டு அணிகளுக்கு உரிமையாளராகின்றனர்.
இதன் படி இந்த தொடரின் கொச்சின் அணியின் உரிமையை சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார்.
சௌரவ் கங்குலி கொல்கத்தா அணியின் உரிமையை வாங்கியுள்ளார்.
தாங்கள் இன்னும் மனதளவில் விளையாட்டு வீரர்களாக இருப்பதாகவும், இதற்காக இந்த அணிகளை கொள்வனவு செய்திருப்பதாகவும் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். (த)


**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
**O/L DAY CLASS**
புதிய பிரிவு ஆரம்பம்
**16.04.2014 புதன் 8.00 மணி**



மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய பயிற்சி நெறி
**HND in PHARMACY**
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
LAVA HOSPITALS
120, Temple Road, Jaffna.
(Tel - 077 316 4617/021 222 4333)
(46677)(12.6)



**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாத விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
புதியவர்களுக்கு முன்னுரிமை, ஒவ்வொரு பிரிவிலும் மிகச்சில இடங்கள் மட்டுமே இன்னும் உள்ளன.
SAAMSON LANGUAGE SCHOOL 379, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567



**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு af Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்... உடன் பதிவுசெய்யுங்கள்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093


## மரண அறிவித்தல்

### செல்வி லதா விஸ்வலிங்கம்



அராலி வடக்கு வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட லதா விஸ்வலிங்கம் 11.04.2014 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் கிருஸ்ணகுமாரி தம்பதியரின் அன்புமகளும் மகேஸ்வரி, சகுந்தலா, தவமணி, நாகம்மா, சரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசையா, முத்துகுமார், செல்வராசா, அப்பாத்துரை, இராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(46758)(7.6.3)
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணலீலா தெபோரா கனகரத்தினம்



யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Bad Friedrichshall ஐ வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணலீலா தெபோரா கனகரத்தினம் (08.04.2014) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள்நித்திரை அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தம்மா (இலங்கை), தங்கம்மா (இந்தியா), கனகலிங்கம் (இலங்கை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் தங்கவேல், சின்னராசா, சாந்தநாயகி (இலங்கை), சாந்தமலர் (இலங்கை), தயானந்தபவானி (கௌரி - டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பகீரதன், சிறிதரன், கிருபாதரன், கிரிதரன், அஜந்தன், சயந்தன், சரங்கன், சுபாஜினி, பிரதீபன், பிராகாஷினி, வசந்தியன் ஆகியோரின் சித்தியும் சாளினி, பார்த்திசன், அனுதன், அனுஸன், கோம்சியா, றஜீபனா, கோகுலன், குகனியா, சகிர்தனா, அபிநயா, அக்ஷனா, அபிவர்மா, அம்பி ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (15.04.2014) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் புத்தூர்
தகவல்:
தங்கவேல் குடும்பம்,
கனகலிங்கம் குடும்பம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.